
திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி

தெளிவுரை





தமிழ்க் கடல்மணி
பேராசிரியர். இரா. இராதாகிருஷ்ணன்
திருச்சிராப்பள்ளி

திருவெம்பாவை &
திருப்பள்ளியெழுச்சி

தெளிவுரை

பேராசிரியர் இரா.இராதாகிருஷ்ணன்
திருச்சிராப்பள்ளி

புவனேஸ்வரி இராதாகிருஷ்ணன் பதிப்பகம்
26, மலையப்ப நகர்,
மல்லியம்பத்து அஞ்சல்
திருச்சிராப்பள்ளி-620 102
(9443921675 - 8825850737)

நூல் விபரக்குறிப்பு

நூல்	:	திருவெம்பாவை & திருப்பள்ளியெழுச்சி
பொருள்	:	பாவை & எழுச்சி விளக்கம்
ஆசிரியர்	:	பேராசிரியர் இரா.இராதாகிருஷ்ணன்
உரிமை	:	இரா.இராதாகிருஷ்ணன் நினைவு அறக்கட்டளை
முதற்பதிப்பு	:	ஜனவரி 2022
தாள்	:	N.S.மேப் லித்தோ (என்.எஸ்.மேப் லித்தோ)
பக்கங்கள்	:	108
படிகள்	:	1000
எழுத்து	:	12 புள்ளிகள்
பதிப்பகம்	:	புவனேஸ்வரி இராதாகிருஷ்ணன் பதிப்பகம் 26, மலையப்ப நகர், மல்லியம்பத்து அஞ்சல் திருச்சிராப்பள்ளி-620 102 (9443921675 - 8825850737)
அச்சிட்டோர்	:	சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ் சிவகாசி.
விலை	:	ரூ.100

திருவெம்பாவை விளக்கம் - சித்தாந்தப் பிழிவு

புலவர் இரெ.சண்முகவடிவேல்,
திருவாரூர்.

பேராசிரியர் இரா.இராதாகிருஷ்ணன் அவர்கள் மேடையிலே வீசிய தென்றலாகத் திகழ்ந்தார்கள். பேச்சு தேனாமிர்தமாகத் தித்தித்தது. தமிழ் இலக்கியங்களைத் தம் நுண்மாண் நுழை புலத்தால் விளக்கிப் பேசியதைக் கேட்டவர்கள், 'இப்படியும் கூடப் பேச முடியுமா?' என்று வியந்து திகைத்து மயங்கினார்கள்.

இப்போது அவர்கள் இல்லை, எனவே, அவர் பேச்சும் இல்லை, பேச்சு என்பது காற்றோடு போவதுதானே? இசையும் கூட அப்படித்தான், காற்றோடு காற்றாகிவிடும், ஆனால் அறிவியல் முன்னேற்றம் அப்படியே விட்டு விடுவதாக இல்லை. எல்லாம் பதிவாகிவிடுகின்றன, எப்போதும் பேச்சைக் கேட்டு மகிழலாம், இசையில் இன்புறலாம், மதுரை சோமு இன்றும் இசையாக வாழ்கிறார்.

அதுபோன்றே, பேராசிரியர் இராதாகிருஷ்ணன் அவர்கள் தம் பேச்சுகளைப் பதிந்து வைத்திருந்தார். தம்பி இரா.மாது அவைகளை நூலாக்கி நம்மிடம் வழங்குகிறார். என்றென்றும் அவைகளை எடுத்தெடுத்துப் படித்து மனநிறைவைப் பெறலாம்.

என்னைப் பொறுத்த அளவில், பேராசிரியர் அவர்கள் எனக்குக் கிடைத்த உடன்பிறவா அண்ணன்.

இராமனுக்கு உடன்பிறவாத் தம்பியர் அமைந்தாற்போன்று நான் அவர்களின் உடன்பிறவாத் தம்பியானேன்.

அவர்களை நான் அண்ணன் என்று கூறிப் பணிய, அவர்கள் தம்பி என்று என்னை அரவணைத்தார்கள்.இந்த இனிய உறவு என் வாழ்வில் நான் பெற்றபெரும்பேறு ஆகும்.

இப்போது அவருடைய கருத்துகளெல்லாம் கவின்மிகு நூல்வடிவம் பெற்று நம் கைகளில் தவழும்போது, பேராசிரியர் அவர்களுடன் கலந்துறவாடுவது போன்ற நெகிழ்வினை அடைகிறோம்.

நூலாக்கித்தரும் மாது வாழ்க, வளர்க!

மார்கழித் திங்களில் திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தார், திருப்பாவை, திருவெம்பாவை விளக்க உரைகளை செவிகுளிரும் வகையில் ஒலிபரப்புவது வழக்கம்.

வானொலியில் நம் பேராசிரியர் இரா.இராதாகிருஷ்ணன் அவர்கள் ஆற்றிய திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி உரையே இப்போது நூலாக வந்து மீண்டும் நம்மை உவகைபெற வைக்கிறது. அன்று செவியாரக் கேட்டுச் சுவைத்தோம். இன்று அதனைக் கண்ணாரக் கண்டு உளமார மாந்தி பேரின்பப் பெருமகிழ்வில் திளைக்கிறோம்.

மாணிக்கவாசகப் பெருந்தகையின் வாசகங்கள் கல்மனத்தையும் கரையவைக்கும், கரைந்த நெஞ்சம் கண்ணீராய் வெளிப்பட்டு உருகவைக்கும்.

இதனால்தான், 'திருவாசகத்துக்கு உருகார் ஒருவாசகத்துக்கும் உருகார்' என்ற ஆன்றோர் வாக்கு உருவாயிற்று.

சிவபெருமானைப் பார்த்து,

"தந்தது உன்தன்னை; கொண்டது என்தன்னை; யார்கொலோ சதுரர்?"

என்று மணிவாசகரைத் தவிர வேறு யாரால் கேட்க இயலும்? நீயா? நானா? என்று அவர்கேட்கும் கேள்வி நம்மைக் கண்ணீர் சிந்த வைக்கிறது.

எதையும் தராமலே எல்லாவற்றையும் பெற்றுக்கொண்ட நான் கெட்டிக்காரனா? நீயா? என்று அவர்கேட்பது, எவ்வளவு வினயமான கேள்வி!

நன்றே செய்வாய் பிழைசெய்வாய்

நானோ இதற்கு நாயகமே?

என்று பாடுவதில் சரணாகதித் தத்துவத்தின் முழுமையைக் கண்டு தெளிகிறோம்.

சித்தாந்தத் தெளிவாளரான மணிவாசகப் பெருமான் அருளியது திருவெம்பாவையும் திருப்பள்ளியெழுச்சியும், திருவெம்பாவை 20 பாடல்களையும் திருப்பள்ளியெழுச்சி 10 பாடல்களையும் மார்கழித் திங்களில் ஒவ்வொருபாடலாகப் பேராசிரியர் விளக்கியுள்ளார்.

வானொலி நிலையத்தார்,
இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

என்ற பொதுமறையின் ஆணையின்படி, திருவெம்பாவை விளக்க உரையைப் பேராசிரியர் இரா.இராதாகிருஷ்ணன் அவர்களை வழங்க வைத்துள்ளனர்.

நம் பேராசிரியர் அவர்கள் தமது உரையைப் பாடலுக்குப் பொருள்கூறும் முறையில் இல்லாமல் முழுமையான விளக்கச் சொற்பெருக்காக ஆற்றியுள்ளார்கள்.

நல்ல வேளையாகத் தம் உரையினை முழுவதுமாக எழுதி வைத்துள்ளார்கள்.

குறிப்பை மட்டும் வைத்துக்கொண்டு சிறப்பாகத் தாம் எண்ணியவற்றை எண்ணியவாறே உரையாற்றும் திறன் வாய்த்தவர்தான் நம் பேராசிரியர்.

எதிர்காலத்திற்கும் பயன்படட்டும் என்று எண்ணியோ என்னவோ, தம் பேச்சை முழுமையாக

எழுதிவைத்துள்ளார்கள். அதனால்தான் இன்று திருவெம்பாவை உரையை முழுமையாக நம்மால் கற்றுணர்ந்து களிபேருவகை கொள்ள முடிகிறது.

சைவ சித்தாந்தத்தில் முழுமையான அனுபவம் கொண்ட பேராசிரியர் தம் உரையைச் சித்தாந்த விளக்கமாக்கி நம் உள்ளத்தை மகிழ்விக்கிறார்கள்.

முப்பொருள் உண்மையை விளக்கும் விதம் நெஞ்சில் பதியக்கூடியதாக அமைந்துள்ளது. பதி பசு பாசம் பற்றிய விளக்கம் சைவசித்தாந்தப் பயிற்சி இல்லாதவர்களும் புரிந்துகொள்ளும் வகையில் பேராசிரியர் அவர்களால் வழங்கப்படுகிறது.

ஆணவ மலம் பற்றிப் பேசும் பேராசிரியர், அந்த சகஜமலம் எல்லோரிடமும் எப்போதும் ஒட்டிக்கொண்டு படாதபாடு படுத்தக்கூடியது என்பதை நன்றாக விளக்கியிருக்கிறார்கள்.

சஞ்சிதம், பிராரப்தம், ஆகாம்யம் எனும் மூன்றையும் விளக்கி ஊழ்வினையினைத் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

வாய்ப்பு கிடைக்கும் இடங்களில், சிறந்த தத்துவங்களை எளிமையாக விளக்கியிருப்பதைப் படிக்கும்போது பெரிய செய்தியை எளிதாக உணர்ந்துகொண்ட மன நிலைபெற்று இறும்பூதெய்துகிறோம். ஒன்றைப் படைக்கும்போது, அப்படைப்பு எளியோர்க்கும் ஆன்றோர்க்கும் ஒவ்வொரு வகையில் பயன்தரவேண்டும். மழைபொழியும்போது ஆறு, குளம், குட்டை, ஏரி, வாய்க்கால் வயல் என எல்லா இடங்களிலும் பொழிந்து நிரப்புகிறது.

திருவெம்பாவைச் சொற்பொழிவினை அவர்கள் ஆற்றியகாலை எல்லாத்தரப்பினரும் கேட்டுப் பயன்கொண்டனர்.

இன்று நூலாக அப்பேச்சு நம் கைக்கு எட்டியுள்ளது. இது எல்லாக் காலத்திலும் நிலைத்து நின்று நாம் படிக்குந்தோறும் பரவசமூட்டும்.

பேசியதோடு நின்றிருந்தால், நாம் புத்தர், இயேசு, முகம்மது நபி, குருநானக், சங்கரர், இராமானுஜர் கருத்துகளை இன்று கேட்டும் கற்றும் திளைக்க இயலாதநிலை எய்தியிருக்கும். அவை ஆன்றோர்களால் எழுதி வைக்கப்பட்டிருப்பதாலேயே, அவற்றை அறிந்து மகிழ்கிறோம்.

பேராசிரியரின் வானொலிப் பேச்சும் எழுத்துருவில் இருந்ததால் புத்தகமாக்கிப் படிக்கிறோம்.

இதற்காகப் பெரிதும் முயன்று நூலாக்கியுள்ள பேராசிரியர் இரா.இராதாகிருஷ்ணனாரின் அருமை மகனார் மாதுவை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

மார்கழியில் திருப்பாவை, திருவெம்பாவை படிக்கும் வழக்கமுள்ளவர்கள், இந்த உரை நூலையும் படித்தால் பெரிதும் பயன் நல்கும்.

முன்னைப் பழமை உரையைப் பின்னைப் புதுமை நூலாக்கியிருக்கும் நேர்த்தியை எண்ணி உவகைநிறை உள்ளத்துடன் போற்றுகிறேன்.

இதுபோன்று, நல்லவற்றை ஆவணப்படுத்திக்காக்கும் அரிய வழக்கம் வளர்வது தமிழின் வளர்ச்சிக்குக் கால்கோளாக அமையும்.

திருவெம்பாவை

'முதல் பாடல்'

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டுஇங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேஎம் தோழி பரிசேலோர் எம்பாவாய்

பேசும் பேச்சுக்கெல்லாம் பொருளுண்டு.
அழியும் பொருள்களைக் குறித்த பேச்சுக்கள் அழிவன.
அழியாப் பொருள் சிவத்தைக் குறித்த பேச்சே
அழியாத பேச்சு - அதுவே திருவெல்லாம் தரும் வாசகம்-திருவாசகம்
வான்கலந்த வாதவூர் எங்கோன்-மாணிக்கவாசகப்பெருமான் அருளிய தமிழ்த்தேனில் சிவக்கொழுந்தைக் குழைத்த ஆனா அமுதமே திருவாசகம்.

திருவாசகத்தின் ஒப்புயர்வற்ற பகுதியே திருவெம்பாவை. கண்ணில் பாவை போல் சிவப் பேரொளியாய், எங்கும் சிவச்சுடரைக் காட்டி நிற்பது திருவெம்பாவை.

திருவெம்பாவை காலை ஒளியில் கண்விழித்தவர்களுக்குச் சரியான பார்வை தரும். ஆழ்ந்து கிடக்கும் துன்பச் சேற்றிலிருந்து பேரின்பக்கரை ஏற வழிகாட்டும்.

அடிமுடி காணுதற்கு அரிய அனலாய் நின்ற அண்ணாமலையானை வணங்க அண்ணல் மணிவாசகர் திருவண்ணாமலை செல்கின்றார். கார்த்திகைத் திங்கள் திருக்கார்த்திகை நன்னாளில் சோதி தரிசனம் ஆகின்றது. அரும்பெரும் சோதியை அப்படியே கண்ட பேரின்பத்தில் திளைத்துத் திருவண்ணாமலையில் மக்கள் கூட்டத்திடையே சித்தமலம் அறுத்த சிவ உன்மத்தனாகத் திரிகின்றார்.

மார்கழித் திங்கள் முதல்நாள் வைகறைப் பொழுது. வாழ்வின் வைகறைப் பொழுதிலிருக்கும், உலகத்து ஒட்டுப் படாத கன்னிமை கழியாப் பெண்கள் மார்கழி நோன்பிற்காகக் கூடுகின்றனர். சலசலத்து ஓடும் அருவி ஒரே ஓசையோடு வருவதுபோல ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி என்று கலகலத்து அண்ணாமலையானையே பாடி வருகின்றனர்.

ஜோதி நாயகனை ஆன்மாவில் பதித்துச் சிவமாகிக் கிடந்த மாணிக்கவாசகர் ஓசை ஒலி எலாம் ஆனானைப் பாடிவரும் பெண்கள் குரல்கேட்டு எழுகின்றார். ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி என்று என்று அவர் மனம் துருவுகின்றது. ஆணாகிய மாணிக்கவாசகர் உடம்பு சிலிர்க்கின்றது. அவர் பெண்ணாகி விடுகின்றார். மார்கழி நோன்பில் அவரும் கலக்கின்றார். மார்கழி நோன்புப் பாடல்கள் நம் பிறவி நீங்கத் திருவெம்பாவையாக, மாணிக்கவாசகமாகப் புறப்படுகின்றன.

இந்த உலகத்தில் எல்லோருமே பெண்கள். ஆண்டவன் ஒருவனே ஆண். அந்த ஒப்பற்ற தலைவனை அடையவே அத்துணை மக்களும் ஏங்குதல் பொருத்தம். பதியோடு பசு இரண்டறக் கலக்க தன்னலம் முழுதும் நீங்க வேண்டும். தன்னலம் அற்ற இயல்பு பெண்களுக்கே உரியது. கற்புள்ள மனைவியாகியும் அன்புள்ள தாயாகியும் பெண்ணே தன்னைக் கரைத்துக் கொள்பவள். வணங்குவதும் பெண்மை. ஆகவே வணங்கத்தக்கதும் பெண்மை.

நாமும் பெண்மை நலம் பதிந்த உள்ளத்தராகி மார்கழி நீராட மாணிக்கவாசக நாயகியொடு திருவெம்பாவைப் பாதையிலே புறப்படுவோம்.

இருள்பிரியாத வைகறைப் பொழுதிலே சிலபெண்கள் ஒளிகாண எழுந்து கூடுகின்றனர். முதலும் முடிவும் இல்லாது காலதத்துவத்தைக் கடந்து நிற்கும், எங்கும் நிறையும் அருமையான, குணம் கடந்த பெரிய ஒளிவெள்ளத்தைப் பாடியவாறு வருகின்றனர். தோழி ஒருத்தி வீட்டு முகப்பிலே நிற்கின்றனர். அவள் இன்னமும் எழுந்து வெளியே வரவில்லை. அவள் எழுந்து கண் விழித்திருக்க வேண்டுமே! அழகிய பெரிய கூரிய வாள்போன்ற பார்வை பெற்ற கண்களை உடையவள் ஆயிற்றே! காலை வெளிச்சத்தில் கடவுள் இட்ட இயற்கை அழகைப் பார் எல்லாம் பார்க்கவேண்டுமே! பார்த்து, இடமெல்லாம் சிவத்தைக் காணவேண்டுமே! பார்க்காமல் கண்மூடிக் கிடப்பது வளர்ச்சி ஆகுமா? உறங்குவதை இந்த உலகத்தவர் கண்வளருதல் என்கிறார்களே? கண்விழித்தால் அன்றோ வளர்ச்சி! அதுசரி; கண்ணுக்குத்தான் மூட இமைஉண்டு. இவள் திறந்த காதுகளுமா கேளாமல் போயின. வெளியே பொன் அணிஇடும் காதின் உள்ளே பொன் மேனி வண்ணன் சிவபெருமான் பெயர் இடவேண்டுமே! இவளுக்கு என்ன இத்தகைய கேளாக்காது. இவள் செவி மிக வன்மையானதா? வைகறைப் போதில் கண்விழிக்காமல் இருப்பதும், நல்லன கேளாமல் இருத்தலும் பெண்மைக்கு அழகா? இவ்வாறு நீள நினைந்து வெளியே இருந்த பெண்கள் உள் இருந்தவளை மாதே என்று கூப்பிட்டு நீயும் பெண்ணா? என்று கேட்டு உசுப்புகின்றனர்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடம்கண்
மாதே! வளருதியோ வன்செவியோ நின்செவிதான்

உள்ளே இருப்பவர்களை வெளியே இருப்பவர்கள் பெரும்பாலும் காண்பதில்லை. கண்டாலும் உணர்வதில்லை. ஆன்மநேயம் கொண்ட ஞானியரை உலகப் பற்றுடையோர் கண்டதுண்டோ? உணர்ந்ததுண்டோ? உள்ளே இருந்தவள், தன்உள்ளே சிவத்தைப் பதித்துச் சிவனோடு இருந்தாள்.

இப்போது வெளியே இருந்தவர்கள் உண்மையைக் காண்கின்றனர். பொய்யில் புரண்டவர்கள் மெய்யைக் காண்கின்றனர்.

மாதேவனை வீதி வழியே பாடி வந்தவர் குரல்கேட்டு உள்ளிருந்தவள் தன்நாமம் கெட்டுத் தலைவன் தாட்கு ஆட்பட்டாள். விம்மினாள்; மெய்ம் மறந்தாள்; மலர்தூவிய உலகப் படுக்கை விட்டுப் புரண்டு இறைவன் அருள தூவிய அவனிட்ட தரையில் விழுந்தாள். அவளுக்கு இனி வெளிக்குரல் கேளாது. அவளோடு உள் குரல் உரையாடுகிறது. அவளுக்கு இனி வெளிப் பார்வை இராது. அவள் ஆன்மாவில் ஆன்ம நாயகனைப் பார்த்துப் பருகியபடி இருக்கிறாள். அவள் உள்ளே வெளியைக் கண்டுவிட்டாள். உள் இருந்தவளின் இந்த நிலை உணர்ந்து வெளியே இருந்த பெண்கள் வியந்து பரவசமாகித் தம் தோழியின் தன்மை உரைக்கின்றனர்.

மாதேவன் வார் கழல்கள் வாழ்த்திய வாழ்த்துஒலிபோய்
வீதி வாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின் மேல்நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே! என்னே!
ஈதேஎம் தோழி பரிசேல் ஓர் எம்பாவாய்.

ஞானஒளி பரவக் கண் விழித்துப்பார்க்க, இறைவன் பேர் செவிகேட்க,மனம்திறக்க, ஆன்மா நிறையச் சிவன்புகத் தன்னை இழந்த நலம் காட்டுவது இத்திருப்பாடல்.

இரண்டாம் பாடல்

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதுஇப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையும் சிலவோ விளையாடி
ஏசும் இடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைசிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.

உலகத்தையே ஒட்டியவர்கள் உண்மையைப் பிடிப்பதில்லை. உண்மையைப் பிடித்தவர்கள் உலகத்தை உதறியவர்கள்.

ஒரு பெண் அவ்வாறு தான் சொல்லிக்கொண்டாள். எனக்குப் பிடிப்பெல்லாம் இறைவன் மேலே; என்பாசம் எல்லாம் சிவத்தின்மேலே; என் ஆசை எல்லாம் ஆண்டவன் மேலே; என்று முன்நாள் எல்லாம் சொல்லிச் சொல்லிக் கிடந்தவள் அவள். தத்துவத்தைப் பிடித்த எக்களிப்பில் திரிந்தவள் அவள்.

மார்கழித்திங்கள்- விடியற்காலையில்-அவள்வீட்டு வாயிலில் மகளிர் சேர்ந்து விட்டனர். அவளோ இன்னமும் எழுந்து வெளியே வரவில்லை.

அப்படி எல்லாம் பேசியவள் இப்படி உறங்குகிறாளே என்று வெளியே இருந்த பெண்களுக்கு ஏமாற்றமாகின்றது. இவள் வெறும்வாய்ப் பேச்சுக்காரி என்று எண்ணுகின்றனர். உள் இருந்தவளைப் பகடியாட கேலி செய்யத் தொடங்குகின்றனர்.

இரவும் பகலும் எப்போதும் என் ஒட்டுறவு பரஞ்சோதியாகிய சிவபெருமானுக்கே என்று - நீ பேசும் போது எல்லாம் சொல்வாயே! இந்த விடியற்காலைப் பொழுது நீ கூறிய பொழுதுகளுக்குள் அடங்காதோ. எங்களுக்குப் புரிந்துவிட்டது. உன்ஆசை சிவபெருமான் மேல்இல்லை. மலர்தூவிய படுக்கைக்கே உன் ஆசை இவ்வாறு கூறியவர்கள் சாளரம் வழியே உள்ளிருந்தவளைக் கண்டிருத்தல் வேண்டும். அவளோ, நோன்பிற்கு உரியன பூண்டு இருக்கின்றாள். ஆகவே நேரிழையாய் என்று கூப்பிட்டு விடுகின்றனர்.

பாசம் பரஞ்சேதிக்கு என்பாய் இராப்பகல்நாம்
பேசும் போது எப்போது இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ? நேரிழையாய்!

உள்ளிருந்தவள் இப்பேச்சையும், பேச்சிலே ஊடாடிய ஏச்சையும் கேட்கின்றாள். நானும் நோன்பிற்குரிய அணி பூண்டிருக்கிறேன். நீங்களும் நோன்பிற்குரியன புறத்தே பூண்டிருக்கிறீர்கள். நீங்களும் நேரிழையீர்களே. நேரிழையீர் என்று அழைத்து உள்ளிருந்தவள், வெளியே இருப்போருடன் பேசத் தொடங்குகிறாள். தன் உயரிய உள்ளத்தையே திறக்கிறாள். என்னைப் படுக்கைக்கு ஆசை வைத்தவள் என்று உரைத்தீர்களே? பேரின்பம் பெறப் புறப்பட்ட நேரத்தில் இச்சிற்றின்பப் பேச்சு எழலாமா? ஆண்டவனைப் பாட வேண்டிய காலத்தில் விளையாட்டுப் பேச்சு எதற்கு? இறைவனைப் புகழ வேண்டிய போதில் ஏச்சுப் பேச்சு ஏனோ? வெளியே மட்டும் நோன்பிற்கு உரிய அணிபூண்டு உள்ளே மனத்திலும், வாயிலும் சிவனைப் பூணாமல் விளையாடியும், ஏசியும் பேசலாமோ? வெளியே இருந்து வீண்பேச்சுப் பேசிய பெண்களை உள்ளேயிருந்தவள் நொந்து கொள்கிறாள். சீசி இப்படியும் பேசலாமோ என்று வழிப்படுத்துகிறாள்.

நேரிழையீர்!
சீசி இவையும் சிலவோ? விளையாடி
ஏசும் இடம் ஈதோ

உள்ளிருந்தவளின் இந்தப்பேச்சு வெளியிருந்தவர்களைத் தாக்கி உலுக்கி விடுகிறது. வெளியிருந்தவர்கள் தம் பிழை உணர்கின்றனர். விளையாடி ஏசிப்பேசி உள்ளம் கருத்தவர்கள், உள்ளே உள்ளம் சிவமாகிச் சிவந்தவளைக் காண்கின்றனர்.

உள்ளிருப்பவள் தன் உள்ளத்துள்ளே கட்டிப்போட்டுள்ள சிவபெருமான் எத்தகையவன் என்று அவர்கள் சிந்தனை படர்கின்றது.

மண்ணோர் வணங்கும் தேவர்கள் போகபூமியில் வாழும் புண்ணியர்கள். தம்மைப் பிறர் வணங்க வேண்டும் என்னும் முனைப்புடையவர்கள். அவர்கள் பிறரை வணங்கக் கூசுபவர்கள். அவர்கள் முனைப்பு, சிவனை வணங்கத் தடையாகி விடுகின்றது. விண்ணோர்க்கு அகப்படா மலர்பாதம் உடையவன் சிவபெருமான். அரிய பெருமான் எளியனாகி மண்ணுலகத்து அடியார்க்குத் தன் பாதம் காட்டிப் புறப்பட்டு வருகின்றான்.

அவன் காணப்படாப் பேரொளி, தேசன் என்று கவலைப்பட வேண்டா அவன் இறங்கி அதோ வருகின்றான். கயிலைமலை மீது கணங்களோடு சிவலோகத்தனாகி விட்டான். அங்கே, மலைக்கு யார் போவது என்று மலைக்க வேண்டா. இதோ அவன் மண்ணுக்கு இறங்கிவிட்டான். தில்லைச் சிற்றம்பலத்துள் கூத்தப்பிரானாகிக் குலவுகின்றான். விண்மட்டும் கடவுளன்று; மண்ணும் அஃதே என்றும் யுகக் கவிஞனின் சொல் சத்தியவாக்காகி இங்கே சீறிப் புறப்படுகின்றது.

தில்லையில் கூத்தாடுபவனை தன் உள்ளத்துள்ளே கூத்தாட வைத்து விட்டாள் உள்ளிருப்பவள்.

இவளே அன்புடையவள். இவள் பக்தியே பக்தி வெளியே இருப்பவர்கள் வியக்கின்றனர். நாம் அன்பற்று, ஆர் என்றே அறியப்படாது போனோமே என்று வருந்துகின்றனர்.

"விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பார்-யாமார் ஏலோர்எம்பாவாய்"

மனம் சிவனையே நினைக்க,
வாய் அவனையே பேச,
உடல் அவனையே வணங்க,
பேரின்பத் தேனில் ஆன்மா திளைக்க
அவனே வந்து தன்னைத் தந்தருளும்
விந்தையை விரிப்பது இத்திருப்பாடல்.

மூன்றாம் பாடல்

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டால் பொல்லாதோ
எத்தோநின் அன்புடமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.

காமனைக் காய்ந்த தூயனை, சிவகாமசுந்தரி நேயனைப் பாடியவண்ணம் அந்தப் பாவையர் கூட்டம் அடுத்த வீட்டு வாயிலை அடைகிறது.

அந்த வீட்டுப் பெண், முத்துச் சிரிப்பகலா முகத்தழகி. பல் விளக்கித் தூயளாக நோன்பிற்காகப் புறப்படத் தயாராகி விட்டவள். நோன்புக்காலம் ஆதலால் தாம்பூலம் தரிக்காத முத்துப் பல்லுடையாள்.

வீதிவாய் மாதேவனை வாழ்த்தி வரும் பெண்கள் குரல் கேட்டும் புன்னகைத்து முத்துப்பல் விளங்க நிற்பவள்.

தோழியர் கூட்டத்தில், அவள் முன்னே, முதலில் வருபவள். செஞ்சடைப் பெருமானின் பெருமையை எப்போதும் நெஞ்சினிக்கப் பேசும் நேரிழையாள் அவள்.

தோழீ! ஈதென்ன விந்தை! எப்பொழுதும் எங்களுக்கு முன் எழுந்து அம்பலவாணனை அத்தன் என்பாய்; ஆனந்தன் என்பாய்; அமுதன் என்பாய்; உன் குமுதவாயால் அவன் தித்திப்பைக் கோடிமுறை கூறுவாயே! அண்ணித்து அமுதூற

ஆயிரமாயிரம் முறை நாவசைப்பாயே! ஆண்டவன் பேர் தித்திப்பைக் காட்டிலும் உன் பேச்சுத் தித்திக்குமே! இப்போது இப்படி உறங்கிக் கிடக்கின்றாயே! வந்து வாயில் கதவைத் திறவாயோ!

"முத்தன்ன வெண்ணகையாய்! முன்வந்து எதிர்எழுந்து
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய்-வந்துன் கடைதிறவாய்".

உள்ளே நின்ற உத்தமி இவர்கள் உரைகேட்டு மேலும் முறுவலிக்கின்றாள். எழுப்ப வேண்டாத தன்னை உலுப்பிய பெண்களை நோக்கிப் பேசுகின்றாள்.

தோழியரே! நீங்கள் சிந்தையைச் சிவன்பால் வைத்த சிறந்த அடியார்கள். பந்தங்களை உதறிப் பரமனிடம் மனத்தைப் பறிகொடுத்த பழைய அடியார்கள். விரிசடைக் கடவுளைப் பணியும் நெறிமுறை அறிந்த பெரிய அடியார்கள். நானோ சிவபக்தியைப் பழகிக்கொள்ளும் புதிய அடிமை. என்குறை நீக்கி ஆண்டு கொண்டால் உங்களுக்கு ஏதும் குறை உண்டாகுமோ?

பத்துடையீர்; ஈசன் பழஅடியீர்; பாங்குடையீர்;
புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டால்
பொல்லாதோ?

உள்ளிருந்தவளின் பணிவு குறித்த இப்பேச்சை வெளியிருந்தோர் கேட்கின்றனர். அவள் பணி மொழியை இவர்கள் தங்களை நோக்கிய கேலியாகக் கருதுகின்றனர். எதிர்கேலி பேசத் தொடங்குகின்றனர்.

"அம்மா நீயா புதிய அடிமை; அளவற்ற உன் அன்பை நாங்கள் அறியோமோ" என்று கெக்கலி கொட்டுகின்றனர்.

உள்ளிருந்தவள் திடுக்கிடுகின்றாள். என்ன! இவர்கள் என்னைப் பரிகாசம் செய்யத் தொடங்கிவிட்டனரே! வருந்துகிறாள்.

வெளியே இருப்போரை நோக்கிச் சற்றுக் கடுமையாகவே வினவுகிறாள். தோழியரே! இந்த நோன்புப்போதில் உள்ளம் அழகிதாகத் திருந்தியோர் சிவபெருமானையே பாடுவார்களே! நீங்கள் என்னைக்கேலி பேசிப் பயனற்றுப் போகலாமா? என்று உணர்த்துகிறாள்.

சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை வெளியிலிருந்து, வாது பேசிய மாதர்க்கு இப்போது தெளிவு பிறக்கின்றது. சிவத்தைப்பாடாது அவத்தைப் பேசியதால் உண்டான குறை புலப்படுகின்றது. எங்களுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும் என்று நொந்து கொள்கின்றனர்.

இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்!

சிவனவன் யாவர்க்கும் தலைவன், தந்தை, அழியா நிலையை அளித்துச் சுவைதரும் அமுதன், பேரின்பம் பிளிற்றும் பெருமான், ஆனந்தன்.

அத்தன், அமுதன், ஆனந்தன் என்று நம் சிவனைப் பாடுதலே நம்கடன். வேறு பேச்சுக்கு வாழ்வில் போதுண்டோ? என்று நம்மைக் கேட்டு நெறிப்படுத்துகின்றது இத் திருப்பாடல்.

நான்காம் பாடல்

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ!
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ!
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

அதோ அந்த வீட்டு வாயிலிலே நோன்பிற்கு எழுந்த பெண்கள் கூட்டம். சிவபெருமானைப் பாடிய வண்ணம் உள்ளனர்.

வீட்டிற்கு உள்ளிருப்பவளும், பல் விளக்கி, முகம் கழுவி, நீறணிந்து நோன்பிற்குப் புறப்படத் தயாராகிவிட்டாள்.

இறைவன் திருநாமம் கேட்டு முகம் மலர்ந் திருக்கிறாள். ஒளி விளங்கும் முத்துப்பல் தெரிய முறுவலித்து நிற்கிறாள். வெளியே இருந்த பெண்கள், அவளை "ஒண்ணித்தில நகையாய்" என்று அழைக்கின்றனர். இன்னமும் பொழுது விடியவில்லையோ? எழுந்து வெளியே வந்து எங்கள் கூட்டத்தில் சேர வேண்டாவோ" என்று வினவுகின்றனர்.

"ஒண்ணித்தில நகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?"

ஆன்ம தரிசனம் செய்தவர்களும், மெய்யுணர்ந்தவர்களும், திருவடிப் பேறு எய்திப் பேரின்பம் துய்த்தவர்களும், தாம்

பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று கருதுபவர்கள் எப்போதும், எங்கும் உள்ள ஆண்டவனைப் பொதுவுடைமையாக எல்லோரும் தடையின்றித் துய்க்கலாம். ஆதலால், உள்ளிருந்தவள், ஆண்டவனைப் பாடிப் பரவசமடைய, நோன்பால் யாவும் பெறத் தக்கவர்கள் எல்லோரும் வந்து விட்டனரோ?- அழகிய கிளிபோன்ற பேச்சுடைய பெண்கள் எல்லோரும் வந்தாயிற்றா? சொல்லிக் கொடுத்ததையே சொல்லும் கிளி; ஒன்றையே சொல்லும். சிவனருளால் அவன் உணர்த்தியதையே சொல்லும், அவனையே பாடும், அப்பெண்கள் கிளிபோன்ற பேச்சுடையார். எனவே உள்ளிருப்பவள் உண்மை தெரிந்து வினவுகின்றாள்.

வண்ணக் கிளி மொழியார் எல்லாரும் வந்தாரோ? வெளியே இருந்தவர்கள் சுற்றிப் பார்க்கின்றனர். வந்திருப்போர் அதிகம் வராதோர் குறைவு. வராதோர் எண்ணிக்கையை அறிந்து சொல்லுதல் எளிது. ஆனால் நோன்புக் காலத்தில் பிறர் குறைகூறிப் பிழைபடுதல் தகாதே? தீக்குறளை சென்றோதோம் என்று சபதம் எடுத்தவர்களாயிற்றே! ஆகையால் வந்துள்ளவர்களை எண்ணிச் சொல்கிறோம் என்று நன்மையே பேச விழைகின்றனர்.

"எண்ணிக் கொடு உள்ளவா சொல்லுகோம்"

நாங்கள், வந்துள்ள அவ்வளவு பேரையும் எண்ணிச் சொல்லும் அத்தனை காலமும் நீ கண்ணைமூடி உறங்கி வீணே நேரத்தைப் போக்காதே" என்று உள் இருந்தவளுக்கு அறிவுறுத்துகின்றனர். அந்த நேரத்தில் சிவபெருமானையே பாடு. அவன் விண்ணுக்கு ஒருமருந்து. வேதத்தின் பிழிந்தெடுத்த பெருமை மிக்க சாறு. அவன் நம் ஞானக் கண்ணுக்கு அகப்படும் இனியான் . அவனைப் பாடினால்

நெஞ்சம் கசிந்து உருகும். பொழுதை வீணாக்காமல் பெருமானைப் பாடு என்று சொல்ல வருகின்றனர்.

அவ்வளவும்
கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கு ஒரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக.....

உள்ளிருப்பவள் ஆண்டவனைப்பாடிக் கசிந்து உருகுவது, வெளியே இருக்கும் நாம் வீணே வந்தோர் தலை எண்ணுவதா?
ஹு ஹு- நாங்கள் எண்ண மாட்டோம்.வீண்பொழுது போக்க மாட்டோம். நீயே வெளிவந்து எண்ணிப்பார்த்துக்கொள்
வந்திருப்போர் எண்ணிக்கை குறைந்தால் மீளப்போய் உறங்கு
என்று கூறி முடிக்கின்றனர்.

"யாம் மாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயிலே லோரெம்பாவாய்"

புறங்கூறாமை என்னும் நாவடக்கம் பெறுக. நோன்பு எதுவும் பலிக்கும் விண்ணுக்கொரு மருந்து மண்ணிலே வேதமாக ஒலிக்கின்றது. அந்த விழுப்பொருள் அடியார் ஞானக் கண்ணிற்கு இனிதாகக் காட்சி தருகின்றது. மூலபண்டாரம் வழங்குகின்றான். வந்து முந்துமினோ!

பரமனையே பாடிக் கசிந்து உள்ளம் உள்ளுக்கு நின்றுருக எல்லோரையும் அழைக்கின்றது இத்திருப்பாடல்.

ஐந்தாம் பாடல்

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓல மிடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

பொருட் செல்வத்தால் மட்டும் இறைவனைப் பிடித்தவர் இலர். உலகியல் கல்வி, கேள்வி, அறிவுச் செல்வத்தால் மட்டும் ஆண்டவனை அடைந்தவர் இலர்.

செல்வத்திற்கு அப்பாலே, அறிவுக்கு அப்பாலே அவன் நிலைபெற்று நிற்கிறான். அவனருளே கண்ணாகக் காணின் அல்லால் சிவனைக் காணல் இயலாது. இதனையே சொல்லிச் சொல்லித் திரிந்தவள் ஒரு பெண். செல்வத்தால் அவனைப் பற்ற முடியாது. மாலறியாத பிரான் என்பாள். அறிவால் அவனைச் சுட்டி உணர முடியாது நான்முகனும் காணா நாயகன் என்பாள். இதனையே பன்னிப் பன்னி மாலறியா நான்முகனும் காணா மலை என்று உரைப்பாள். இறைவனின் தத்துவத்தை அவள் உரைப்பது பக்குவம் அடைந்தோர்க்குப் பாலாகத் தேனாக இனிக்கும். அவள் கேட்போர் செவி நிறைய மாலறியா மலை என்று பாலூறப் பேசுவாள். நான்முகனும் காணா மலை என்று தேன் ஒழுகப் பகர்வாள். இப்படி அவள் வாயில் பாலும் தேனும் ஊறிப் பேச்சு எழும்.

செல்வச் செழிப்புச் செருக்கால் சித்தத்தை மயக்கும். மால் என்றால் மயக்கம் என்ற பொருளும் உண்டு.

மயக்கமுடையார் சித்தத்தைச் சிவன்பால் வைப்பதுண்டோ? ஒருமுகப்படுத்திக் காண்பார்க்கு உள்ளது புரியும். ஆனால், சிந்தையை நான்முகப்படுத்தியோர்க்குப் பலமுகப்படுத்தியோர்க்குச் சிவன் அகப்படுவானா? எனவே பெருமான் மாலறியா நான்முகனும் காணாமலை என்பது பேருண்மையே! இந்த உண்மையை இனிக்கப்பேசும் வழக்குடைய பெண் அவள்.

இனிக்கப் பேசும் அவள் தொடர்ந்து வெறுக்கவும் பேசி விடுவாள். தானே சிவனை அறிந்தவள் என்று வீண் பெருமிதம் அடித்துக் கொள்வாள். நான் அறிவேன் என்று கூடச் சொல்லாமல் நாம் அறிவோம் என்று வீறாப்பாள். கேட்கும் பதமுடைய பெண்களுக்கு இப்பேச்சு நாராசமாகப் பாயும். அவள் பொய்ப்பேச்சு, வஞ்சகப்பேச்சு அவர்களைக் குத்தும். சிவபெருமானை அறிந்தவளாகக் காட்டிக் கொண்டு வஞ்சனைப் பேச்சுப் பேசிய அவள் வீட்டு வாயிலிலே நோன்பிற்கென வந்து பரமனைப்பாடி நிற்கும் பெண்கள் கூட்டம். அவளை எழுப்புகிறார்கள். வாயில் கதவைத் திறந்து வெளியே வர ஏவுகிறார்கள்.

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்று உள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன் வாய்ப் படிறீ கடைதிறவாய்

அவள் வாயில் கதவுத் தாள் நீக்கவில்லை. வெளியே வரவில்லை. வஞ்சகி என்று அவளை ஏசிய பெண்களுக்கு இரக்கம் உண்டாகிறது. இப்போது அவளையும் அவன் தாட்கு ஆட்படுத்த எண்ணுகின்றனர்.

பெருமான் பெருமை இன்னது என்று நாங்கள் ஓலமிடுகின்றோம். கேள். மண் அறியுமா அவனை? விண்ணறியுமா அவனை? பின் எதுதான் அறியும்.

அவனருளால் அவன்தாள் காணலே இயல்வது. மண்ணும் விண்ணும் அறியா அரியவன் அவன். அவன் அருமை கூறிச் சிவனே என்று ஒலிக்கின்றோம். விழிந்தெழுந்து கேள்.

அரிய அவன் இறங்கி வருகிறான். நம்மை அருள் தந்து ஆட்கொள்கிறான். நம் கசடு நீக்கித் தன் கழலடிக்குச் சேர்க்கிறான். அவன் எளிமை உணர்ந்து சிவனே என்று அரற்றுகிறோம். விழித்து எழுந்து கேள்.

அருமை அவன் கோலம்; எளிமை அவன் சீலம். அவன் கோலம் உணர்ந்தும், சீலம் தெளிந்தும் அவனைச் சிவனே, சிவனே என்று கூப்பிட்டு ஓலமிடுகின்றோம். நீ இன்னமும் விழித்து எழவில்லையோ!

நீ உன் தலைமேலே பிரபஞ்ச வாசனையை ஏற்றிக் கொண்டிருக்கிறாய். உலகியல் பற்றே உன்னை மூடியிருக்கிறது. சிவப்பற்று உனக்கில்லையே. இதுவா உன் நிலைமை-என்று தோழியர் இரங்கிக் கூறுகின்றனர்.

"ஞாலமே விண்ணே பிறவே அறிவு அரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று
ஓலமிடினும் உணராய் உணராய் காண்
ஏலக்குழலி பரிசேலோரெம்பாவாய்".

செருக்குற்றுத் தாழ்ந்து புழுதியில் புரளாமல் செருக்கற்று அரியதை எளிதில் பிடித்து விண்ணேற ஏணி இடுகின்றது இத்திருப்பாடல்.

ஆறாம் பாடல்

மானேநீ நென்னலை நாளை வந்துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போனதிசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்!
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.

அடுத்த வீட்டவள் வாயிலில் பெண்கள் கூட்டம். சிவ, சிவா என்ற கோஷம். வீட்டுக்குள் இருப்பவள் எழுந்து வெளிவரவில்லை. அவள் மான் போன்றவளாகத் தோற்றியவள். பெண்மைக்குரிய பிறவிக்குணம் நாணம். பெண்ணுக்கு உயிரிலும் உயர்ந்த குண அணி. வெளியே மான்போன்ற மருட்சிப் பார்வையும் உள்ளே நாணமும், அச்சமும் பெண்களுக்கு உரியன. உள் இருப்பவள் முதல் நாள் நானே முன் எழுந்து வந்து உங்களை எல்லாம் உரிய போதில் எழுப்புவேன் என்று கூறியவள். அவள் இப்போது இவ்வளவு பேர் எழுந்து வந்தும் தான் எழவில்லை. நாணம் மிக்க அவள் தன் சொல் தவறியதற்கு வெட்கப்படாமல், உள்ளே கதவுமூடக் கிடக்கிறாளே! இறைவனை நாம் எல்லாம் பாடத் தான் வாய்மூடிக் கிடக்கிறாளே! நாணம் இல்லாத இவளுக்கு இன்னம் விடியவில்லையா? சிவக்கடலின் ஆழத்தில் கிடக்க வேண்டியவள் உறக்கக் கடலின் அடி மட்டத்தில் மூழ்கிவிட்டாளா? வெளியே உள்ள பெண்கள் வியந்து வினவுகின்றனர்.

**மானே! நீ நென்னலை நாளைவந்து உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ!**

விண்ணவரும், மண்ணவரும், ஏனையவரும் அறிதற்கு அருமையான சிவபெருமான். அவன் வலிய வந்து ஆட்கொள்ளும் அன்புப் பிழம்பு. கருணைக்கடல். பக்தி செய் பக்தர்க்குத் தித்திக்கும் திருப்பாதத்தான். வேதங்கள் பாடித் தேடிய அவன் பாதத்தை நாங்கள் பாடியவாறு வந்து உன்வீட்டு வாயிலில் கூடியுள்ளோம். இன்னமும் உன் உறக்கம் தீரவில்லையே! எழுந்து ஒருபேச்சுப் பேசினால் ஆகாதா?

**"வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்கு உன்வாய் திறவாய்!**

நீயே எழுந்து வந்து வாயிலைத் திறந்திருக்க வேண்டும். சிவபெருமான் பெயரைச் சொல்லி உள்ளத்து வாயிலை வாயைத் திறந்து எங்களுடன் பாடி இருக்கவேண்டும். நீயோ உறக்கத்தின் உறவுமுடிந்து எழவில்லை. ஏனடி, பேசாமல் இருக்கிறாய்? சிவெருமான் நாமத்தை நாங்கள் பாடக் கேட்டு உருகிப்போய் விட்டாயா? இல்லையே! ஒருவேளை உனக்குப் பெருமான் இறைவனாக மாட்டான் போலும்! அப்படியும் நினைக்க முடியவில்லையே! அவன் கைப்பிடித்த மான் நீ! உனக்கும், எமக்கும், எல்லோர்க்கும் அவனே தலைவன் தோழி வா! வாயில் கதவைத்திற! வாயைத்திற! சிவபெருமானைப் பாடு என்று வெளியே நின்றவர் அழைக்கின்றனர்.

**ஊனே உருகாய் உனக்கே உறும் – எமக்கும்
ஏனோர்க்கும் தம் கோனைப் பாடேலோரெம்பாவாய்**

புல்லைக் கறிக்கும் போதெல்லாம் கொடிய பகை விலங்கு வந்துவிடுமோ என்று மருண்டு நோக்கும் மானைப்போல, உலகியல் பற்றிக் கொள்ளுமோ என்று அஞ்சி பற்று ஒதுங்கி நிற்பர் பெரியோர். இங்கோ அச்சமும், வெட்கமும் இன்றிக் கிடக்கிறாள் ஒருபெண். அவளை மானே! என்று இகழ்ச்சி தோன்ற அழைக்கின்றனர்.

நானே எழுவேன்; நானே எழுப்புவேன் என்று அகங்கரிப்பவர் எழுவதுமில்லை யாரையும் எழுப்புவதுமில்லை. மேட்டு நிலத்தில் நீர் நிலைத்து நிற்பதில்லை. அங்கு பயிரிடவும் முடியாது பள்ளத்தில் தண்ணீர் தங்கும். பயிர்செய்வதும் எளிது.

நான் எனும் மேட்டு மனம் கொண்டவரிடம் பக்திப்பயிர் வளர்வதில்லை. சிவகதி என்னும் பயனும் கிடைப்பதில்லை.

பணிவு என்னும் பள்ள மனம் கொண்டவரிடத்தே, கசிந்துருகும் கண்ணீர்பாய, பக்திப்பயிர் வளர்ந்து சிவகதிப் பயன் விளையும் சிவனே வந்து அவனே போகமாக விளைவான்.

ஊன் உருக உள்ளம் கனிந்துருக நான் எனும் மேடு கெட்டுப் பணிவென்னும் பள்ள மனம் பெற்றுப் பரமனைப் பாடுக என்று நெறிகாட்டுகிறது இத்திருப்பாடல்.

ஏழாம் பாடல்

அன்னே இவையும் சிலவோ பலவமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்!

இருட்டுத்திரை விலக்கி வெளிச்ச நாடகத்தை அரங்கேற்ற வெங்கதிரோன் இன்னும் கீழ்த்திசையில் தோன்றவில்லை. பாதி மாதொடும் கூட்டிய பரமனின் பாதத்தை வீதியெல்லாம் ஒலிக்கப் பாடியவாறு வந்த கன்னிப்பெண்கள் ஒருவீட்டு வாயிலில் நிற்கின்றனர். அந்த வீட்டிற்குள்ளிருந்தவள் இன்னும் எழுந்து வெளிவரவில்லை. அவள் எல்லையற்ற சிவபத்தியுடையாள். அவள் இயல்புகளை வெளியே நின்றோர் நினைக்கின்றனர்.

தேவர்களும் சிந்தித்து உணர்தற்கரிய பெரியானை,
ஒப்பற்றவனை, மிக்க பெருமையுடையானை,

சிவபெருமானை எப்போதும், எங்கும், எதைக்கொண்டும் எண்ணியிருப்பவள் அவள்.... அவள் பதார்த்தத்தைப் பார்க்காமல் பரம்பொருளையே பார்ப்பவள். கோயில் மணிஓசை, தாளத்தின் பேரொலி, முரசின் அதிர்வு, சங்கநாதம் எது கேட்டாலும் சிவனை நினைந்து சிவா என்றே வாய் திறப்பவள். பாடத் தொடங்கி 'தென்னா' என்று ஆழத்தில் குரல் எழக் கேட்ட அளவிலேயே சிவனை நினைந்து நெருப்பிலிட்ட மெழுகென உருகுவாள்.

என்புருகும் இத்தகைய அன்புடையாள் இன்னம் எழுந்து வரவில்லையே! என்ன வியப்பு? என்று வெளியே நின்றோர் கலங்குகின்றனர்.

பக்திப்பாலை முன்னின்று ஊட்ட வேண்டிய தாய் போன்றவள் உள்ளிருந்தவள். தோழியர் எல்லோரினும் அவள் பக்தி அநுபவக்காரி. குறைந்த வயதில் நிறைந்த முதிர்வுடையாள். அவள் முதுக்குறை நங்கை அவளை அம்மா! என்று கூப்பிட்டுத் தாம் கன்றுகளாக நின்று கன்னியர் அழைக்கின்றனர்.

அன்னே! இவையும் சிலவோ? பலஅமரர்
உன்னற்கு அரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே வாய்திறப்பாய்
தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகொப்பாய்
அம்மா? இதுவோ உன் நிலைமை?

என் தலைவன், என் தலைவன் என்று யாரை உரிமை பாராட்டிப் பேசுவாயோ அந்தப் பெருமானை நாங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே என்ஆனை, என் இறைவன், என் இனிய அமுதன் என்று உரிமை கொண்டாடிப் பேசுகின்றோமே! அடியே! உன் உரிமை இங்கே பறிபோகிறதே! அடியே! இது கூடத் தெரியாமல் உறங்குகிறாயா? நல்ல நாயகனை இழக்கத் துணிவார் உண்டோ? இந்த உலகத்திலே!

"என் ஆனை! என் அரையன்! இன்னமுது என்று எல்லோமும்
சொன்னோம் கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ!"

பாறைமனம் கொண்ட பாவிகள் அல்லவா கடமை மறப்பார்கள்? செய்தற்கு உரியவற்றைக் கூடச் செய்யாமல் சோம்பிச் செயலற்றுக் கிடப்பார்கள். சத்வகுணம் தலையெடுக்க வேண்டிய காலத்தில் தமோ குணப்பட்டுக்

கிடந்து அழிவார்கள். என்ன இப்பெண் இவ்வாறு கிடக்கிறாளே. இவள் அறிவு அற்றுப் போனாளா? உரிமையை இழக்கலாமா? உரிமையை இழந்தவர்கள் உயிரற்றவர்களாயிற்றே! இவளும் செயலற்று வாளா கிடக்கிறாளே! உறக்கத்தின் தன்மை இதுவா? பெண்கள் ஆற்றாமைப்பட்டுப் போகின்றனர்.

வன்நெஞ்சம் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

காமம் என்னும் கரடி-குரோதம் என்னும் வேங்கை-லோபம் என்னும் முதலை - மோகம் என்னும் நாகம்-மதம் என்னும் புலி- மார்ச்சர்யம் என்னும் பேய்-இவ்வளவு கொடிய விலங்குகளுக்கிடையே பிரபஞ்சக் காட்டில் சிக்கிய மான் மானிடம். இவை நம்மைப்பற்றி விடுமோ என்று காட்டைக் கடந்து வெளி ஏறுபவர்கள் அடியார்கள். வெளியேற வழியுண்டா? இதோ வழி

உறங்காதே-எழுந்திரு-உறங்கி உலகில் விழாதே -விழித்து எழுந்து சிவமாகிய உரிமையைப் பார்.

உலகியல் பற்று என்னும் அழுக்கை நீக்கு
சிவப்பற்றிலே குளித்துத் தூய்மை எய்து.
நீ தாயாகவேண்டும்-எழுந்துவா-வழிகாட்டு என்று உணர்வூட்டுகிறது இத்திருப்பாடல்.

எட்டாம் பாடல்

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழி லியம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ!
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்.

மெல்ல நடைபோட்டு இரவு விடை பெறுகின்றது. கோழிகளும், பிற பறவைகளும் காலைப் பொழுதுக்குக் கட்டியம் கூறத் தொடங்கி விட்டன. புறத்தே இருள் விலகும் நேரம். அக இருளை நீக்க ஆண்டவன் பெயரைச் சொல்லப் புறப்படும் நேரம்.

ஆண்டவனின் திருநாமத்தைப் பாடிய வண்ணம் கன்னிப்பெண்கள் ஒரு வீட்டு வாயிலில் வந்து கூடுகின்றனர். அந்த வீட்டுப் பெண் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கிறாள். எதையும் ஆதாரத்தோடு அறிந்த பிறகே நம்பிக்கை கொள்ளும் நங்கை போலும் அவள். எனவே விடிந்ததற்கு அடையாளம் காட்டிப் பெண்கள் அவளை எழுப்புகின்றனர்.

தோழியே! கோழி கூவி விட்டது. ஒரு கோழி அன்று. ஊர்எங்கும் கோழிகள் உரத்துக் கூவுகின்றன. மரக் கொம்பு தோறும் பறவையினங்களும் ஆர்க்கின்றன. இரவு நீங்கியதற்கு இன்னமுமா சான்று வேண்டும்? அறிவுள்ள மனிதர்களும் எழுந்து விட்டனர். அதோ உற்றுக்கேள்-திருக்கோயில்களில் நாதசுவர இசையோடு பிற

மங்கல இசைக்கருவிகளும் ஒலிக்கின்றன. வெண்சங்குகள் முழங்குகின்றன. பெண்ணே! இந்த ஓசைகள் எல்லாம் உன் உறக்கத்தைப் போக்கவில்லையா?

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்

தோழீ! இந்த ஓசைகள் மட்டுமா!

சிவபெருமான் தனிப்பெரும் பேரொளிப் பிழம்பு. அவன் ஒப்பற்ற பெருங்கருணை வெள்ளம்.

சிறப்பிற் சிறப்பான பரம்பொருள்

அவனைப்பாடிவந்தோம் அந்தப் பேரொலி கூடவா உன்காதுக்கு எட்டாமல் போயிற்று?

கேழில் பரஞ்சோதி
கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள்
பாடினோம் கேட்டிலையோ?

கோழிகளின் கொக்கரிப்பும், பறவைகளின் பரவசப்பாட்டும், மங்கலக் கருவிகளின் பொங்கு பெருங்கீதமும், எழுப்பவந்த பாவையரின் பரமன் பெயரிட்ட பாட்டும் உள்ளிருந்த பெண்ணின் உறக்கத்தைப் போக்குவதில் தோல்வியே கண்டன. வெளியே இருந்தோர் சற்றுக் கடிந்து கொள்கின்றனர்.

தோழீ! நீ தான் உறங்கி வீழ்கிறாய். நாங்களாவது வாழ்த்துகிறோம். நீ வாழ்வாயாக; உன் உறக்கமும் வாழ்க. இஃதுஎன்ன? இப்படி உறங்குகிறாய்? கருணைப்பெருங்கடல்- கால எல்லை, இட எல்லை, குண எல்லை கடந்து நிற்கும் முதல்வன். என்றும் நின்று நிலைக்கும் ஒப்பற்றவன்.

உலகத்துச்செல்வம் ஒட்டாத ஏழையை, உலகத்து அறிவுக் கறை படியாத ஏழையைத் தேடிவந்து காத்து நீங்காத செல்வம் நல்கும் ஏழை பங்காளன். அவனே சிவன். அவனைச் சிந்தையில் நிறுத்திப் பாட வேண்டாவோ? பெருமானிடம் அன்புபூணும் முறை இதுவா? எழுந்து வா, பாடு என்று தோழியர் அதட்டி அழைக்கின்றனர்.

வாழி ஈதென்ன உறக்கமோ? வாய்திறவாய்?
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங்காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

கோழி கூவினால் கும்மிருட்டுப் போய்விடுமா? பறவைகள் பாடினால் பகல் வெளிச்சம் வந்திடுமா? இசைக்கருவிகள் முழங்கினால் இருட்டகலுமா? உறங்கியவர் விழித்து எழுந்தால் தானே விடிவு வரும்.

உலகத்தின் ஓசை ஒலி எல்லாம் உத்தமனைச் சிவனை நினைவூட்டும் படி நம் ஆன்மா விழித்தெழ வேண்டும்.

உதித்தாங்கு உழல்வதும், சாவதும் வாழ்வாகி விடாது. அஃது உலகியல் இருட்டில் ஆடும் குருட்டாட்டமே ஆகும்.

பாச உறக்கத்திலிருந்து விழித்து எழுக.
சிவன் பேர் சொல்லிச் சொல்லிப் பரவசம் ஊறி நிற்க.

உள்ளத்தில் நேசவலை விரித்து அந்தத் தேசனைச் சிவபெருமானைச் சிக்கெனப் பற்றுக. உயிர்க்கடமை இதுவே என்று உ ண்மை உரைக்கின்றது இத்திருப்பாடல்.

ஒன்பதாம் பாடல்

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்!
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்.

மார்கழி நோன்பிற்குப் பாவை நல்லார் எல்லோரும் எழுந்து வந்தாயிற்று

பரமனடி பாடி நீர்த்துறைக்குச் செல்ல வேண்டும். சிற்றஞ்சிறுகாலே எழுந்து, சிவபெருமான் பொற்றாமரை அடியே பாடி, நீராடிப் பின் தூய வெண்ணீறணிந்து, கைகுவித்து அவன் காலுற வணங்கி என்ன வரம் பெறுவது மார்கழி நோன்பிற்குப் பரிசாக-கன்னிப் பெண்கள் கேட்கின்றனர்.

யாரிடம் வரம் கேட்பது? எவன் எதையும் தரவல்லனோ அவனிடம் - எதை வரமாகக் கேட்பது? எது கேட்கத் தக்கதோ அதனை-எங்கே, எப்போது கேட்பது? எங்கும், எப்போதும் தன் அருள் தன்மை மாறாமல்-கொடுக்கக் கொடுக்கக் குறையாமல் எவன் விளங்குகிறானோ அவனிடம் எப்போதும் எது வேண்டுமானாலும் கேட்கலாம். இவ்வளவுதானே கேட்பதற்கும், பெறுவதற்கும் விதிக்கப்பட்ட இலக்கணம். இந்த இலக்கணம் தவறாமல் கேட்கத் தொடங்குகின்றனர் அந்தச் சிவக்குலக் கன்னியர்.

கன்னிப்பெண்கள் குரல்-மாணிக்க வாசக நாயகியின் குரலாக வெளிப்படுகிறது.

முக்கண் பெருமானையே முன்னிறுத்திப் பேசுகின்றனர். பெருமானே! இவ்வுலகில் பழைமை நிலைப்பதில்லை. காலத்தின் கொடிய கரங்கள் முன்னைப் பழமையை முற்றிலும் கொன்று விடுகின்றன. புதுமைப்பொருள்களோ? நேற்று இல்லாமலிருந்து, இன்று முளைத்து, நாளை முற்றிப் பழமையாகி, மாறி, ஒரு நாள் கால மயக்கத்தில் கரைந்து மறைந்து விடுகின்றன. யாவுமே நேற்று, இன்று, நாளை என்னும் நியதிக்குள் அடங்கிப் பொய்யாய்ப் பழங்கதையாய், கனவாய், நினைவாய், மறைப்பாய், மறப்பாய்ப் போய் ஒடுங்கி விடுகின்றன. ஆனால், எங்கள் பெருமானே! இந்தக் கால நியதியே உன்னுள் அடக்கம்.

காலக் கைகளுக்கெட்டாக் கால காலன் நீ. பழைமைக்குப் பழைமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் விளைங்குபவன் நீ. மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத்தாய காலமும் கணக்கும் நீத்த காரணன் நீ.

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்தும் அப்பெற்றியனே.

சிவ பரம்பொருளாகிய அதற்கு கால எல்லை இல்லை; அண்டத்தை மேடையாக்கி, பரவெளியில் பொது நடம்புரியும் நம்பனுக்கு இட எல்லையும் இல்லை. அவனிடம் இல்லாதது இல்லை. வேண்டியதைக் கேட்டு விண்ணப்பிக்கலாம். அவனோ, இவனாகி நேருக்குநேர் நிற்கிறான்.

பெருமானே! பிறந்து மொழி பயின்ற பின்எல்லாம் காதல் சிறந்து நின் சேவடியே சேர்ந்த பிறிதொன்றறியாக் கன்னிகள் நாங்கள். வாழையடி வாழையாக வந்த திருக்கூட்ட மரபு எங்களுடையது. சைவக்குடி என்னும் தெய்வநிலத்தில் முளைத்த நாங்கள் கன்னிக்கொடிகள். பற்றிப் படரச் சிவக்கொம்பு தேடுகிறோம். உலகியல் காற்றில் அலைபட்டுக் கொடிகள் அறுபடலாமா? ஆசாபாச ஆடுகள் கொடிகளை மிதிக்கலாமா? சிதைக்கலாமா?

எங்களுக்குக் கொழுகொம்பு எம் கணவன்மார் அல்லரோ? சிவபெருமானே சைவமணம் மிகுந்த சிவச் சந்தனமணம் வீசும் கணவன் என்னும் படர் கொம்பு தா என்று வரங்கேட்க வந்துள்ள கொடிகள் நாங்கள் சிவபக்தி மிக்க, சிவனடியார் ஒருவரே கணவராகக் கிடைத்து விட்டால், பெருமானே அவர் திருவடிகளை வணங்குவோம்; அவர்க்கே நாங்கள் தோழமை பூண்போம்; அவரே எம்கணவர்; அப்பப்பா! என்ன பேரின்பம்! அவர் சொல்லும் வழியெல்லாம் அடிமைகளாகிப் பணிசெய்து கிடப்போம்! எங்கள் வாழ்வில் அவமே இல்லாமல் சிவமே பலித்துவிடும்.

"உன்னைப் பிரானாகப்பெற்ற உன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம்; ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம் கணவர் ஆவார்; அவர் உகந்து
சொன்னபரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்"

ஐயனே! எங்கள் வேண்டுகோள் இவ்வளவே! என்று சிவபெருமானை யாசிக்கின்றனர்.

வாழ்வில் நிறைவை விரும்பாதவர் உண்டா? பெண்ணுக்கு நிறைவு, பெருமை, காவல் எல்லாம் அவள் பெற்ற கணவனால்தானே! ஆன்மீக வாழ்வும், பயனும் கணவனால் அல்லவா ஈடேறும்.

சிவனடியாராகிய கணவனை எங்களுக்கு அளிப்பாயா, பெருமானே! தொண்டர் கூட்டம் பெருகினால்தானே தலைவனுக்குப் பெருமை; நீ உறுதியாக வரம் அளிப்பாய்! தெரியும். எம் தலைவன் எங்களைக் கைவிடான். நாங்கள் பற்றச் சிவனடியார் ஒருவரைத் தந்துவிடு. நாங்கள் புறம் போகாமல் படர்ந்து விடுவோம். அதன்பின், எங்களுக்கு ஒரு குறையும் இராது.

"இன்னவகையே எமக்கு எங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோரெம்பாவாய்"

கன்னிப் பெண்கள், காலம் கடந்த பெருமானிடம் காலமறிந்து வரம் கேட்கின்றனர். **திருமணம் இரண்டு உடம்புகளின் சங்கமம் மட்டுமா! இரண்டு உயிர்களின் அத்வைதக்கலப்பு** உலகத்துக் காமத்திற்கும், பொருளுக்கும் மேலே அறமும், வீடும் பலிப்பதற்காக அல்லவா இல்லறம்.

கன்னிப்பெண், உலகத்து இந்த வீட்டிலிருந்து அந்த வீட்டைப் பிடிக்க வரம் கேட்கிறாள்.

ஆன்ம நாயகி பரமான்ம நாயகனைப் பிடிக்க அடியார் உறவை வேண்டுவது இத்திருப்பாடல்.

பத்தாவது பாடல்

பாதாளம் ஏழினுங்கீழ்ச் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆர்அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.

இன்னம் சற்றுநேரத்தில் கதிரவன் தன் கிரணக்கரம் நீட்டி நிலமகளைத் தட்டி எழுப்பப் போகிறான். அதற்கு முன்பே உறக்கம் உதறி எறிந்து உமையொரு பாகனின் நாமத்தைப் பாடியவாறு மண்ணை மிதித்து, விண்ணை மதித்துக் கன்னிப் பெண்கள் மார்கழி நீராடப் புறப்பட்டு விட்டனர்.

சிவபெருமான் பெருமைகளைப் பேசப் பாட அவர்களுக்குப் பேராசை. திருவடியைத் தீந்தமிழில் பாடலாமா? முடியழகை முத்தமிழில் இசைக்கலாமா? அவன் மேனி அழகுஉரைக்கவா?அவன் ஊர் பாடுவோமா? அவன் பேர் பாடுவோமா? அவன் உறவு இசைப்போமா? அவன் பகை எது பகிர்வோமா? நினைக்கிறார்கள்.

பாட்டன்மார் வகுத்த பாதை எண்ணத் தடத்தில் தட்டுப்படுகிறது. பெருமானைப் பாதாதி கேசமாக அன்றோ பாடவேண்டும். அதுதான் முறை.

திருவடியைப் பாடுவோம்-முடிவாயிற்று. ஆனால் அதுவே முடியாததாயிற்று.

சொல்லின் எல்லைக்குள் அந்தச் சுந்தரனின் திருவடிகளைக் கொண்டு வரமுடியுமா?

ஆதாரநாயகனின் அந்தத் திருவடிகள் பாதாளம் ஏழினும் கீழிருந்து தாங்கி காக்கும் ஆற்றல் பெற்றவை. அதே போது அவை மலரின் மென்மையையும் அல்லவா கொண்டுள்ளன.

ஆக்கத்தைத் தனியே கூறலாம். அழிவைத் தனியே கூறலாம். ஆக்க அழிவு என்று இணைவதுண்டா? வெம்மையைத் தனியே பேசலாம். குளிர்ச்சியைத் தனியே கூறலாம். வெம்மைக் குளிர்ச்சி என்றுண்டா?

பாதாளம் ஏழினும் கீழிருந்து அனைத்தையும் தாங்கும் வன்மையைத் தனியே பாடலாம். அடியார் இதயங்களை அதிர்ச்சியின்றித் தாங்கும் மென்மையைத் தனியே கூறலாம். ஆனால் வன்மையும், மென்மையும் ஒன்றாய் இணைந்திருக்கும் அற்புதத்தை எவ்வாறு பாடுவது?

பேசும் வாய் ஊமையாகலாம். ஆனால் இங்கோ சொல்லே ஊமையாகி விட்டது.

“பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்”

ஊமைச் சொல்லின் சண்டமாருதம் இது; ஆம், கட்டிடத்தை வருணிக்கலாம். அஸ்திவாரத்தைக் கண்டு சொல்பவர் யார்? சுட்டி அறியப்படும் பிரபஞ்சத்தைச் சுட்டி அறியப்படா அவன் திருவடிகள் தாங்குகின்றன. சொல்லுக்கப்பால் நின்று சொக்கவைக்கும் மலர்ப் பாதங்கள் அவை.

இனி, திருமுடியைப் பாடவேண்டும். அடியார்கள் அன்பு நாரிட்டுத் தொண்டு மலர் தொடுத்த ஞானவாசம் வீசும் மாலைகளை அணிந்த முடி அது. ஆனால் அந்த அருட்பாமாலைகளின் பொருளையும் கடந்தது திருமுடி. சொல்லைக் கடந்தது திருவடி. சொல்லின் பொருளையே கடந்தது திருமுடி.

'போதார் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே'

சொல்லும் பொருளுமாகிய உமையொரு பாகத்தான் என்ற காளிதாசக் காட்சியோ இது? உடனே அவன் திருமேனிக்கு நினைவு பாய்கிறது. ஆணா? பாடலாம்; பெண்ணா பலவாறு பாடலாம். அலியா பாடலாம்; இந்தச்சிவன்; ஆண்பாதி; பெண்பாதி; அலியும் அன்று; எவ்வாறு பாடுவது! சிவனைப் பாட வந்து திகைப்பூண்டை மிதித்து விட்டனர்.

"பேதை ஒருபால்; திருமேனி ஒன்றல்லன்"

பாட முடியாதவனை மனத்தால் துளாவுகிறார்கள். அவன் வேதத்தின் விழுப்பொருள்; முதற்பொருள். எழுகின்ற நாதமெல்லாம் அவனே! அவனை எப்படி ஏழு சுவரங்களுக்குள் அடைத்துப் பாடுவது; அவனைக் கண்டு பிடிப்பது என்று முனைகிறார்கள். சொல்லுக்குள் அடங்காப் பரமன், சொல்லுக்குள் அடங்காப் பெருமை கொண்ட எண்ணற்ற உண்மை அடியார்கள் உள்ளத்துள் உள்ளானடி! என்று தேனிக்கின்றனர்.

"வேத முதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன் தொண்டருளன்"

அடியார் சிந்தனையுள்ளே தேனூறி நிற்கும் பெருமான் என்று எண்ணிய வேளையில், திருவண்ணாமலைத்

திருக்கோயிலில் பணிபுரியும் பெண்கள் எதிர்ப்படுகின்றனர். சிவத்தை உள்ளே கட்டிப்போட்ட இவர்களைக் கேட்போம். சிவபெருமான் ஊர் எது? அவன் பேர் எது? அவனுக்கு உறவினர் யாவர்? மாற்றார் யார்? அண்ணாமலையான் கோயில் பிணாப்பிள்ளைகள்-தொண்டு செய்மகளிர் என்ன பதில் சொல்கிறார்கள் சிவனுக்குப் பகை, உறவில்லை; எல்லாம் அவன் ஊர்! எல்லாம் அவன்பேர்-அவனைப் பாடுவதாவது? பேச்சிற்றே பேசின் அல்லால் பெருமை ஒன்றும் உணரல் ஆகாது என்று கருதிப் புன்னகை காட்டிப் போகிறார்கள் போலும்!

"கோதில் குலத்து அரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்!
ஏதவன் ஊர்? ஏதவன்பேர்? ஆர்உற்றார்? ஆர் அயலார்
ஏதவனைப்பாடும் பரிசேலோரெம்பாவாய்"

அடியார் உள்ளத்துள் அகப்படும் சிவத்தின்
விடுதலை பெற்ற விச்வரூபத்தை
தேன் துளியாக்குவது இத்திருப்பாடல்.

பதினோராம் பாடல்

**மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல் போல்
செய்யவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா!
ஐயா நீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.**

மார்கழி மாதம் விடியற்காலம் இருட்போர்வை இழுத்துப் போர்த்து முகம் மூடி விருப்பத்தோடு உறங்கத் தக்க நேரம். கன்னிப்பெண்களோ எழுந்து விட்டார்கள்.

இந்த மாதத்தில் விடியற்காலையில் எழுந்து பழகியவர்க்கு வைகறைத் துயிலெழுதல் வழக்கமாகி விடும். இதுதான் நோன்பின் நோக்கமோ? இந்த மாதத்தில் விடிவு தெரியக் கண்டால் வாழ்க்கையே விடிந்து விடுமோ?

கன்னிப்பெண்கள் அதிகாலையில் எழுந்தது மட்டுமா? பரமனைப் பாடினார்கள்-பல் கிட்டாமல், நாத்தடுமாறாமல் பாடினார்கள். அவர்களுக்குக் குளிர் இல்லை; அவர்கள் மேல் சிவஞான வெப்பம் பட்டுவிட்டது.

குளத்தில் நீர்நிலையில் இறங்குகின்றனர். முகேர் என்று ஒலிஎழ முங்கி முங்கிக் குடைந்து குடைந்து குளிர்ந்த நீரில் நீராடுகின்றனர். இந்த மார்கழி மாதத்தில் விடியற்காலையில், குளிர்ந்த நீரில், இருந்து நீராடினால், அதன்பின் வாழ்நாள் முழுதும் அச்சக் குளிர் அகன்று

விடுமோ? பாசக் குளிர் பறந்துபோகுமோ? இதுதான் நோன்போ?

விடியற்காலையில் எழுந்து, பரமனைப்பாடி, நீர்நிலையில் நீராடும் கன்னிப்பெண்கள், பெருமானையே முன்னிலைக்கு இழுத்து வந்து விட்டனர். அவனிடம் உரையாடுகின்றனர்.

"ஐயனே! நாங்கள் வழி வழியாக உன் அடிமைகள் உன் தனித்த பெருமையால் உன் அடிமைகளாகிய எங்களுக்குப் பெருவாழ்வு பலித்துவிட்டது. நெருப்புப் போலச் சிவந்த மேனியனே! உன்னையே நினைந்தோம்; பாடினோம். உன் பக்கலில் குளிர் காய்ந்தோம். மார்கழிக் குளிர் தெரியவில்லை. அக்னி சாட்சி என்பார்கள். நீயே சர்வபூதசாட்சி. யார்க்கும் சான்றென நிற்பவன் நீ. குளிர்விட்டு நீயே சான்றாக நீர் நிறைந்த பொய்கையில் புகுந்து முகேர் என்று மூழ்கினோம். குடைந்து குடைந்து நீராடினோம். உன் திருவடிகளையே பாடிப் பரவி நீராடி நிற்கிறோம். பிரபஞ்சச் சேற்றில் படாமல் தெளிந்த சிவஞான நீரிலே நனைந்து நிற்கிறோம்.

எரிந்து ஏதுமற்ற சாம்பலுக்கும் நீயே காப்பெனக் காட்ட வெண்ணீறு மேனியில் சண்ணித்தாய். நீ வெண்ணீறாடி! எங்களையும் காப்பாய் என்று நாங்களும் திருநீற்றுக் காப்பிடுவோம். நீ உமை ஒரு பாகத்தான். உமாதேவி அருளிட்ட கண்ணிற்கு அடையாளமாய் மையிட்டாள். அவள் கண்களையே நாங்கள் பார்க்கிறோம். சிறுச் சிறிதே எங்கள் மேல் நோக்காவோ என்ற ஏக்கம். கன்னிமை கழியா அவள் உலகங்களை ஈன்றாளோ? அவள் சிற்றிடையில் எங்களையும் தாங்குவாளோ என்று நாங்கள் அவள் சிறு மருங்குல் நோக்கி ஏங்குகிறோம். தாயும், தந்தையுமாகி மணக்கோலம் மாறாது நித்தமணாளனாகி

நிரம்ப அழகுடைய பெருமானே, உன்னை வந்தடைந்திருக்கிறோம் வந்தனை புரிய என்று கன்னிப் பெண்கள் பரமனைப் பாடுகின்றனர்.

மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேர் என்னக்
கையால் குடைந்து குடைந்து உன் கழல் பாடி
ஐயா! வழி அடியோம் வாழ்ந்தோம் காண் ஆரழல்போல்
செய்யா! வெண்ணீறாடி! செல்வா! சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா!

உமாதேவி உன்னுள்ளே அடக்கம்; உமாதேவிக்குள்ளே நீ அடக்கம்; நீங்கள் இருவரும் அடியார் உள்ளத்துள்ளே அடக்கம் மடந்தை மணவாளா! எங்களுக்கும் சிவனடியார் ஒருவரையே மணவாளராகத் தருவாயா? குறிப்புக் காட்டி மடந்தை மணவாளா! என்று அழைக்கின்றனர்.

அன்று தொட்டு இன்றுவரை உன் விளையாடல் உணர்ந்து, சிவ வலைப்பட்ட அடியார்கள், உய்யும் வகை எனக் காட்டிய பாதையில் தடம் கடவாமல் வாழ்வில் நடக்கின்றோம்.

எம் கடன் பணி செய்து கிடப்பதனால் பெருமானே! உன் கடன் அடியோங்களைத் தாங்குதல் அன்றோ!

நாங்கள் தளர்வுறாமல் நீயே எங்களைத் தாங்கிக்கொள்ள வேண்டும்.

ஆன்மக் கன்னியின் நிமிர்ந்த நன்னடைக்கும், நேர்கொண்ட பார்வைக்கும், திமிர்ந்த ஞானப் பெருமிதத்திற்கும் திறவுகோல் இத்திருப்பாடல்.

பன்னிரண்டாம் பாடல்

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நல் தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்.

மார்கழி, விடியலில் பாவை நல்லார் எழுந்து விட்டனர்.

எல்லோரும் சேர்ந்து, ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை வீதி வழியே பாடிவந்து அலை மோதித் திகழும் நீர்த்துறையை அடைந்தனர். முகேர் என ஒலிஎழ நீரில் பாய்ந்தனர். கையால் குடைந்து குடைந்து நீராடினர். ஆராத காதலுடன் பேராயிரம் பெற்ற பெருமானைப் பரவினர்.

உடலில் அழுக்கு நீரால் தீரும். உள்ளத்தின் அழுக்கோ மனம் படிய அவன் பேர் பாடத் தீரும். மாயா வினைப் பயனால் உருவாகும் ஓயாப் பிறவிப் பிணிக்குச் சிவனை அன்றிப் புணை உண்டோ? மகளிர் நினைக்கின்றனர். தூய நீர் போன்றவன் அந்தத் தாயிற் சிறந்த தயாவான தத்துவன். எனவே, அந்தப் பொய்கையை அவனாக, அவன் அருள் வெள்ளமாகவே காண்கின்றனர்.

“ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆடும் தீர்த்தன்”. என்று நமக்கெல்லாம்கூட அறிவிக்கின்றனர். சிவன்,

எங்கே,எங்கே என்று ஏங்கித் தவிக்க வேண்டா. இதோ, இங்கே, இந்த மண்ணிலே, மண்ணுக்கே விண்ணின் பெருமையைத் தரும் தில்லையிலே, ஞானத் தீயினைக் கையிலேந்தி, ஆனந்த நடமிடும் நடராசனாக விளங்குகிறான்.

"நல் தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்"

நாம் ஆடுவதெல்லாம் தெருக்கூத்து. விரைவில் முடிந்துவிடும் சிறுநாடகம். தில்லைச் சிற்றம்பலத்தே அவன் ஆடுவதோ அருட்கூத்து. நித்தியநாடகம் முடிவற்றது. ஐந்தொழிலுக்கும் அடையாளக் கூத்து. விண்ணையும், மண்ணையும், பிறயாவற்றையும் காத்தும், படைத்தும், ஒடுக்கியும் விளையாடும் பெருமான் அவன்.

படைத்தலைச் சொல்லிக் காத்தலையும் ஒடுக்குதலையும் பின்னர்ப் பேச வேண்டிய பாவையர் காத்தலை முன்னர்ப் பாடுகின்றனர். தமக்கு அவன் அளிக்க வேண்டிய காவலை முன்னர்க் கருதுகின்றனர் போலும்!

"இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி"

என்று அவன் அலகிலா விளையாட்டைப் பாடுகின்றனர்.

நீராடும் இன்பம் நிலைகொள்ளாப் பேரின்பம். அதுவும் போராடும் பிறவியைப் போக்கும் மார்கழி நீராட்டம் என்றால் கேட்கவும் வேண்டுமோ! அரன் ஒருவனே ஆண்டான். அவன் ஒருவனே நம்மை உடையான் அவனைப் பாடி நீராடுவோம். வாருங்கள். தோழியரே! நீராடும் போது எழும் நம் வளைஒலி அந்த வஞ்சமில்லானை வாழ்த்தட்டும். மேகலைகளின் ஓசை அந்தமெய்ப் பொருளைப் போற்றட்டும். கூந்தல் மணம் கண்டு கூடிவரும்

வண்டினத்தின் ரீங்காரம் அந்தத் தொண்டர்க்கருளும் தூயவனுக்குத் துதியாகட்டும்.

வார்த்தையும் பேசி வளை சிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல் மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்து உடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனை நீர் ஆடேலோரெம்பாவாய்.

என்று இசைக்கின்றனர்.

கற்புள்ள பெண்ணுக்குக் கணவன் தரும் இன்பத்தை பதம்பெற்ற ஆன்மப்பெண்ணுக்கு ஆண்டவன் தருகின்றான். வளையும், மேகலையும் ஒலிக்க நீராடுதல் என்று எழுகின்ற சிற்றின்பப் பேச்சு, பேரின்பத்தின் எல்லைக்கு அளவுகோல்.

ஆர்த்த பிறவித் துயர் கெட, நம் நினைவனைத்தும் நிவேதனமாக, ஒலி அனைத்தும் வாழ்த்தாகச் செயலனைத்தும் வழிபாடாக நின்று, நிலவி என்றும் இருப்பதற்கு நெறிகாட்டுகின்றது. இத்திருப்பாடல்.

பதின்மூன்றாம் பாடல்

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

இரவு மங்கை தன் இருட்டுப் போர்வையை எடுத்துவிட எண்ணும் இளங்காலை நேரம். உள்ளத்தில் பக்தி வெள்ளம் பொங்க, மகேசன் அடி பாடி, மார்கழி நீராட வந்த பெண்கள் பொய்கையைப் பார்க்கின்றனர்.

பொய்யாத பருவமழையால் பொங்கித்ததும்பும் மடுஅது. கண்ணுக்கு இனிய காட்சிகள். காதுக்கு இனிய ஓசைகள். சிந்தையைப் பறிகொடுத்து நிற்கின்றனர். பசிய கருங்குவளை மலர்கள். செக்கச்சிவந்த தாமரைப்பூக்கள். கூடு விட்டுப் புறப்பட்ட பறவைகளின் கொஞ்சல் ஒலி. மரக் காதலியைத் தொட்டு விளையாடும் காற்றுக் காதலனின் குறும்புச் சலசலப்பு. பொய்கையின் மெய் சிலிர்க்கும் அலைகள். அவற்றின் ஓசை. உடல் அழுக்கைப் போக்க நீர்த்துறைக்கு வருவாரின் கூட்டம். இவற்றைக்கண்டும், கேட்டும் கன்னியர் உள்ளம் துள்ளுகிறது.

"பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம் போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்"

பொய்கைக் காட்சியைத் தான் இவ்வாறு பாடத் தொடங்குகின்றனர். ஆனால் உள்ளத்து பக்தி உலகத்து அழகுணர்ச்சியை வென்று விட்டது. பொய்கையில் பரமனையே பார்த்து விடுகின்றனர். அம்மையப்பனாகவே அந்த மடுவை நோக்கிப் பாடிப் பரவசமடைகின்றனர்.

கருங்குவளை மலர் பெருமானின் நீலகண்டத்தையும், அம்மையின் அழகுக்கண் பாவைகளையும், அவள் அற்புதத் திருமேனி வண்ணத்தையும் காட்டுகிறது.

பெருமானின் திருமுகத்தையும், பிராட்டியின் திருமுகத்தையும், இறைவன் மேனி நிறத்தையும் தாமரைப் போது புலப்படுத்துகின்றது.

வெண்மையான நீர்ப்பறவைகள்-அன்னை அணிந்துள்ள சங்கு வளையல்களையும் அப்பன் ஆடியுள்ள வெண்ணீற்றையும் நினைவுபடுத்துகின்றன. அம்கம் குருகினத்தால் என்றும் அங்கம் குருகினத்தால் என்றும் பொருள் தரப்பிரிக்குமாறு, பிரியாமல் நிற்கும் இத்தொடர் சிவசக்தியின் தாதான்மிய சம்பந்தத்தையே காட்டி விடுகிறது. அதுமட்டுமா! அங்கு அங்கு உருகினத்தால் என்றாகி உருகும் அடியார் திருக்கூட்டத்தையும் உள்ளடக்கி விடுகிறது. பெண்கள் வாக்கிலே அம்மையப்பன் அடியாரொடு உலா வருகிறான்.

பின்னும் அரவத்தால் என்று ஓசைகளைப் பாடுகின்றனர்.

பின்னிக் கிடக்கும் பாம்புகளை அணிந்த பெருமானையும் பாம்புப்போலப் பின்னிய கூந்தலுடைய பிராட்டியையும் குறித்து விடுகின்றனர்.

பொய்கையிடத்தே உடல் அழுக்கைப்போக்க வருவோர் கூட்டம். அம்மையப்பனிடத்தே ஆன்ம அழுக்கை, பற்றை நீக்க வருவோர் கூட்டம்.

பொய்கையிலே பிராட்டியொடு பெருமானையும் கண்டாயிற்று.

இறைவனைக் கூடும் இனிய உணர்வுடன் பொய்கையில் புகுந்து புனித நீராடுகின்றனர். சிலம்புகள் ஒலிக்க நடந்து, பொய்கையில் பாய்ந்து, வளையல்கள் ஒலிக்க, மார்பகம் விம்ம, உணர்வு செழிக்க நீராடுகின்றனர்.

அம்மையப்பனின் வியாபகத் தன்மையில் வியாப்பியமாக அடங்கி நிற்கின்றனர்.

தொன்மைக் கோலமாகிய அம்மையப்பக் கோலம் கொண்டது அந்தப் பொய்கை. ஆன்மப் பெண்களுக்கு நயன தீட்சையும், மானசீக தீட்சையும், ஸ்பர்ச தீட்சையும், வாசிக தீட்சையும் தந்தது பொய்கை. அம்மையப்பனே வந்து அருள்கிறான்.

> **"எங்கள் பிராட்டியும் எம்கோனும் போன்றிசைந்த**
> **பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்து நம்**
> **சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்**
> **கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்**
> **பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோரெம்பாவாய்!"**

அம்மையொடு அப்பனைப் பொய்கையில் கண்ட பெண்கள்-என்ன பெருந்தத்துவம் இது?
எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவன்றோ!

தாய் காட்டத் தந்தையை அறியுமாறு-பிராட்டியைப்பார் -பேரருளால் பிரானைக் காட்டி உன்னை அவன்தாட்கு ஆட்படுத்துவாள்.

பிரிந்த ஆன்ம மகனை உமைத் தாயொடும் சிவத் தகப்பனொடும் சேர்த்து வைக்க அறிவிப்பிடுகிறது இத்திருப்பாடல்.

பதினான்காம் பாடல்

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோர் எம்பாவாய்.

மார்கழி நோன்பு மேற்கொண்ட கன்னிப்பெண்கள் தில்லைத் திருச்சிற்றம்பலத்தானைப் பாடிய வண்ணம் நீராடுகின்றனர். உறக்கத்தை ஓட்டியது கண்; உத்தமனைப் பாடியது வாய்; நறுநீர் தடத்தை நோக்கி நடந்தன கால். ஆனாலும் அவர்களில் சிலர், சிவநீரில் புகாமல் உலகியல் பற்றுக் கரையில் ஒதுங்கி நின்றனர் போலும்! காடுவெட்டி, நிலம் திருத்திக் காட்டெருவும் போட்டு, விதைத்து, நீர்ப் பாய்ச்சிக் களையெடுத்துப் பயிர் விளைந்து பயன்தரும்போது அறுவடை செய்யாமல் அஞ்சி ஒதுங்கலாமா? எனவே நீரில் பாய்ந்தாடும் பைந்தொடியார் பயந்து நிற்கும் பாவை நல்லாரை அழைத்துப் பாடவாரீர்! பளிங்கு நீரில் ஆடவாரீர் என்று பரிந்துரைக்கின்றனர். இல்லை! இல்லை! உலகியல் சேற்றைப் பூசிக்கொண்ட நம்மை நீராடித் தூய்மை பெற உசுப்புகின்றனர் ஆன்மநேயத்தார்.

தோழியர்களே! காதிலணிந்த உங்கள் தோடு அசையட்டும். பைம்பொன் நகைகள் ஆடட்டும். கூந்தலில் சூடிய மாலை துள்ளட்டும். அதில் மொய்க்கும் வண்டுகள் சுழலட்டும். தண்ணீரில் மூழ்குவோம். திருச்சிற்றம்பலத்தாடும் தத்துவாதீதனைப் பாடுவோம்.

வேதமுதலாய் விளங்கும் அப்போதப் பொருளின் புகழைப் போற்றுவோம். கொன்றை மாலையைப் பாடுவோம். ஆதி அந்தம் நடுஇல்லா ஆனந்த நாடனை, அகம் குழையக் கீதம் இசைப்போம்.

மரம் முழுதும் பரவிக்கிடக்கும் சாரம் கனியில் இனிக்கிறது.

மண் எனும் தாயின் மடிமுழுதும் தேங்கிய தண்ணீர் ஊற்றுக்கண்ணில் பிலிற்றுகிறது

கன்றுக்குப்பால் பசுவின் மடிக்காம்பில் சுரக்கிறது.

ஆண்டவன் திருவருள் எங்கும் பரவி இருப்பினும் திருக்கோயில்களில் வெளிப்படப் படிந்து நிற்கிறது.

பொன்னிற் சிறந்தது சாம்பூநதம்; பூவிற் சிறந்தது தாமரை; திருக்கோயில்களில் சிறந்தது தில்லைத் திருக்கோயில் அல்லவா? அதுவே கோயில். எனவே தில்லைத் திருச்சிற்றம்பலத்தைப் பாடுங்கள். திருச்சிற்றம்பலம் என வழுத்துதலே திருமுறை.

> "காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
> கோதை குழல்ஆட வண்டின் குழாம் ஆடச்
> சீதப்புனல் ஆடி சிற்றம்பலம் பாடி"

என்று அழைக்கின்றனர்.

ஆடும் பெருமான் ஆடுகின்றான். அவன்ஆடலில் எழுந்த ஒலியில் அன்றோ மொழிகள் எல்லாம் எழுந்தன. மூலஓசையின் முதல்நாயகன் அவன். ஓசைக்கு ஒழுங்கு கட்டிப் பொருளுக்குப் பெருமைதந்து, இமயம் முதல் குமரிவரை ஒன்றாய் நின்று என்றும் நின்று நிலவும் வேதம்

அவன் முகத்தில் பிறந்ததன்றோ? ஆகவே, சிற்றம்பலம் பாடிச் சீதப்புனலாடும் பெண்கள் வேத விழுப்பொருளைப் பரவிக் கொண்டாடுகின்றனர்.

அறிவுள்ள இடத்தில் அந்த அறிவுக்கு அறிவு அவன்.
ஆற்றலுள்ள இடத்தில் அந்த ஆற்றலுக்கு ஊற்று அவன்
எது உள்ள இடத்திலும் அது அதற்கு ஆக்கம் அவனே!
ஒன்றாய், உடனாய், வேறாய்ப் பேரொளி தானாய் நிற்கும் பிரான் அவன்.

அவன் வேதப்பொருளாய் அருவமாகி, ஜோதியாய் அருவுருவாகி, கொன்றைத் தார்பூண்ட மணாளனாய் உருவாகி நிற்கிறான். பெண்கள் விம்மிதமுற்றுப் பாடுகின்றனர். இம்மட்டோ! அவனே முதல்; அவனே முடிவு! எங்கே எல்லாம் ஒடுங்குகிறதோஅங்கேதானே எல்லாம் தோன்றும். அவன் முதலாகி மூத்து அழிவதில்லை. முதலில் தோற்றியபடியே முடிவிலும் நிற்கிறான். அம்மா! இது பெருவிந்தை! என்று நாவாரப் பாடுகின்றனர்.

வேதப் பொருள் பாடி அப்பொருளாமா பாடி
சோதித் திறம் பாடி சூழ் கொன்றைத் தார்பாடி
ஆதித் திறம்பாடி அந்தமாமாபாடி

என்று பாடிப் பாடிப் பரவுகின்றனர்.

அந்தப் பெண்கள் சிவனை வளைத்துப் பிடிக்க ஒரு வழி காண்கின்றனர். போகத்திற்குரியது அன்றோ மார்புமாலை. ஆகவே அவன் கொன்றை மாலையைப் பற்றி இழுக்கின்றனர். கழுத்தைச் சுற்றிச் சூழ்ந்த மாலையாம். வலுவாகப் பிடித்து இழுக்கிறார்கள்.

போகத்திற்குரிய கொன்றைமாலை மார்பில் கண்டதும் சக்திதரிசனம் ஆகின்றது. வினைக் கீடாக நம்மைப் பிறப்பித்து வளர்த்து வரும் தாய் அல்லவோ அவள்! திருச்சிற்றம்பலத் திருக்கோயில் பாடினோமே! தாயின் சிறந்த கோயில் இல்லையே அவள் பாதம் பணிவோம். நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன் இருதாள் நிழற் கீழ் அல்லவா மூவகை உலகும் முகிழ்த்தன. அம்மையின் பாதம் பணிந்து எம்மையும் இன்புறுவோம் என்று அழைக்கின்றனர்.

"பேதித்து நம்மை வளர்த்து எடுத்த பெய்வளைதன்
பாதத் திறம் பாடி ஆடேலோ ரெம்பாவாய்."

எல்லாம் பாடி இறுதியில் தாயின் திருவடிபற்றி மடியேறி ஞானப்பால் சுவைக்க வழிகாட்டுகிறது இத்திருப்பாடல்.

பதினைந்தாம் பாடல்

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர்! வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

அம்மையப்பனாய்த் தோற்றமளிக்கும் அற்புத நீர்த்துறை. அகமும் முகமும் ஒன்றாய் மலர்ந்த உத்தமப்பெண்கள் கூட்டம்.
மார்கழி நீராடல் பொலிவு பெற்றுவிட்டது.

எம்பெருமான், எம்பெருமான் என்று ஒவ்வொரு சமயம் உரிமையுடன் கூவி நிற்கின்றனர். அந்தப் பெண்கள் கூட்டத்திலே ஒருத்தி தனித்தவள். அவளைப் பார்கின்றனர். கொள்ளை வியப்பில் ஆழ்கின்றனர்.

"நாமோ ஒவ்வொரு சமயந்தான் எம்பெருமான் எம்பெருமான்" என்று சொல்கிறோம். இவளோ ஒரு கணம் கூட ஓயாமல் நம்பெருமான் பெயர் சொல்லி அழைக்கின்றாள். அந்த உத்தமனின் சீர் பாடுகின்றாள். உன்மத்தம் கொண்டவள் போல் சித்தம் பறி கொடுத்து நிற்கின்றாள். அவள் கண்கள்! கண்களா அவை கண்ணீர் அருவிகள்! மெய்ம்மறந்து நிற்கின்றாள். கைகூப்பித் தொழுகின்றாள். உடல் சிலிர்த்து மண்ணில் வீழ்ந்து மாதேவனை வணங்குகிறாள். 'நான் கொண்ட நோன்பு நின் அடியலால் பிறர்தம்மை நாடாமையாகும்' என்னும் ஆன்மக் கற்புடன்

சிவபெருமான் ஒருவனையே பணிகின்றாள். எல்லாம் அற்றுத் தன்னை இழந்து விட்ட பெரு நலத்தில் திளைத்திருக்கிறாள். அம்பலத்து அரசுக்கு ஆட்பட்டு இவ்வாறு பித்தாகிப் போவாரும் உளரோ என்று வியக்குமாறு விளங்குகிறாள்" என்று ஏனைய மகளிர் அதிசயிக்கின்றனர்.

"ஓர் ஒரு கால் எம்பெருமான் என்றென்றே; நம்பெருமான்
சீர்ஒருகால் வாயோவாள் சித்தம் களி கூர
நீர்ஒருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பார்ஒருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான் பணியாள்
பேரரையற்கு இங்ஙனே பித்தொருவர் ஆமாறும் ஆர் ஒருவர்."

தாக்கும் குளிருக்கு நடுங்கவில்லை அவள் தளிர்மேனி. சில்லென்ற தண்ணீரால் அவள் மெய் சிலிர்க்கவில்லை. அவளுடைய கண்ணீர் துன்பத்தின் சுவடன்று.

அவள் மனத் தடாகத்தில் சிவத்தாமரை மலர்ந்துள்ளது! பேரின்பத்தேன் பிலிற்றுகின்றது. ஆன்ம நாயகனின் திருவடித் தாமரை தந்த அருட்போதையில் அவள் மேனி நடுங்குகின்றது; மெய்சிலிர்க்கிறது. ஆனந்தக் கண்ணீர் வெள்ளம் இமைக்கரையைக்கடந்து கடைவழியே பொங்கிப் பாய்கின்றது.

தோழியரே! எந்தத் தலைவனும் இப்படித் தன் தலைவியை ஆளுமைகொண்டு பித்தாக்கி ஆட்டி வைக்க முடியாது. இத் தலைவனுக்கே நாமும் ஆட்படவேண்டும். சிறப்பான பெண்பிறவி பெற்றோம். கச்சணிந்த மங்கையரே! வாருங்கள்! வாயார அந்த வஞ்சமிலானைப் பரவுவோம் நகையணிந்த நங்கையரே! வாருங்கள்! அழகிய பூத்த மலர்ப்பொய்கையிலே நீராடுவோம். அம்மையப்பனைக் கூடுவோம்!

...இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வார் உருவப் பூண்முலையீர் வாயார நாம் பாடி
ஏர் உருவப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோரெம்பாவாய்

நான் என்னும் அகப்பற்றாகிய அகங்காரத்தையும்
எனது என்னும் புறப்பற்றாகிய மமகாரத்தையும்

அவனா என்னும் போட்டியையும், அவனுக்கா என்னும் பொறாமையையும், வாழ்நாள் முழுவதும் அறுவடை செய்து, மகசூலை மலையாகக் குவிக்கிறோம். வாழ்க்கை நிலத்தில் நாம் நடத்தும் இந்த நலம் கெட்ட வேளாண்மை குறித்து நினைத்தால் நமக்கே இகழ்ச்சி தோன்றும். முற்றினால் நம்மீதே வெறுப்பு வரும். முடிவில் வேதனை நெருப்பு நம்மையே சுடும்.

ஆன்மீக வாழ்க்கை நிலத்தில் நடத்தும் விவசாயமே வேறு.

அங்கே நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டலாம்.

தந்தது உன் தன்னைக் கொண்டது என்தன்னை என்று சிவபோகம் கொண்டு களிக்கலாம்.

நானற்ற அடியார் கூட்டத்திலே உயர்வில்லை; தாழ்வில்லை; வேற்றுமை ஏதும் இல்லை.

எல்லோர்க்கும் சமபோகம். நோன்பு மேற்கொண்ட மகளிர் கூட்டமே ஆன்ம விவசாயிகள் மாநாடு ஆயிற்று. அடியார் இயல்பே மற்றவரை உயர்வாகக் கருதுவது.

மகளிர் கூட்டத்திலே ஒருத்தி சிவப் பைத்தியம்

பிடித்துச் சிவபோகம் காண்கிறாள். மற்றவரும் அப்படியே!

உலகியல் பைத்தியம் பிடித்தால் வேறு வைத்தியரைத் தேடவேண்டும். ஆனால் சிவப்பித்தம் பிடித்தால் வைத்திய நாதனும் அவனே. அவனும் பித்தனே! என்ன விந்தை இது.

உலகியல்பற்று எனும் துன்பக்கட்டு விட்டு, அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுத்துச் சிவப்பித்தேறிப் பேரின்ப வீடு பெறப் பேரானந்தக் கண்ணீர் வழிகண்ட மாணிக்கவாசக நாயகியின் அனுபவம் இத்திருப்பாடல்.

பதினாறாந்திருப்பாடல்

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னில் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

அளவிறந்த நெடுங்காலம் சித்தர், யோகர், அறிஞர் மலரயன் முதலோர் அனந்தவேதம், களவிறந்தும், செய்யும் கரணாதியிருந்தும் காணுதற்கரியவனாய் விளங்குகின்றான் அந்தச் சிவபெருமான். அவனுடைய திருவருளையும் கண்ணால் காண முடியவில்லை. ஆனால் அந்தத் திருவருளின் மறு உருவமாக நாம் காண்பது மழைதானே! அம்மழை தரும் தண்ணீர் இல்லையேல் இந்த மாநிலத்தில் வளமேது, வாழ்வுதானேது.

நாடு செழிக்க நல்ல மழை வேண்டும். வீடு சிறக்க நல்ல கணவன் வேண்டும்! வளம் பெருக மழையும், அறம் தழைக்க கணவனும் வேண்டுமென, அந்த வேண்டுதல் வேண்டாமை இலானை வேண்டி, நோற்பது தானே, மார்கழி நோன்பு! இத்திருப்பாடலில் சிறப்பாக மழையை வேண்டிப் பாடுகின்றனர். ஆனால் பாடலை ஊன்றிக் கவனித்தால் அது வேண்டுகோளாய்ப் புலப்படவில்லை. அந்தக் கிள்ளை மொழியால் கெஞ்சிக் கேட்பதாகவும் தெரியவில்லை நெஞ்சத்துணிவோடு கார்முகிலை நோக்கிக் கடுமையாக ஆணையல்லவா இடுகின்றார்கள்.

"வான் முகிலே! கேள்! வற்றாத பெருங்கடலை நோக்கி விரைவாகச் செல்! எங்கள் அன்னை பராசக்தியின் உள்ளம் அருளால் நிறைந்திருப்பதுபோல், நீ தண்ணீர் வெள்ளத்தால் நிரம்ப வேண்டும். கடலைச் சுருக்கி நீரை நிறைய முகந்துக் கொள்! உடனே எழு! எங்கள் துயர் துடைக்க அந்தத் தூயவள் ஓடோடி வருவது போல் நீயும் பறந்தோடி வா! வரும்பொழுதே உன் உடல் எங்கள் அன்னை உமாதேவியின் உடல்போல் கருமை நிறம் பெற வேண்டும். எம் அன்னையின் இடையைப் போல்உன் மின்னல் கீற்றுகள் தோற்றம் கொள்ள வேண்டும். உன் இடியோசை எங்களுக்கு எதை நினைவூட்டவேண்டும் தெரியுமோ! எம் அன்னையின் திருவடி பொற்சிலம்பின் ஒலியாக அது கேட்க வேண்டும். எங்கள் தாய், அன்பால் தன் புருவம் நெளித்து எங்களைக் கருணையோடு பார்ப்பாள். அதுபோல் நீயும் விண்ணில் வானவில்லை வளைக்க வேண்டும்.

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து, எம்மை ஆளுடையான் இட்டிடையின்
மின்னிப்பொலிந்து, எம்பெருமாட்டி திருவடிமேல்
பொன் அம் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலை குலவி

முகிலே, பின்னர் என்ன செய்ய வேண்டுமென்று கூறுகிறோம். கவனமாய்க் கேள். எங்களையெல்லாம் அடிமை கொண்டவள் பிராட்டி. அவளை ஒரு போதும் பிரியாதவன் எங்கள் பெருமான். தன் அடியார்க்கும் எம்மை போன்ற அறியாதார்க்கும் சிவபெருமான் வழங்குவதற்கு முன்பே, பெருமாட்டி பேரருள் சுரப்பது வழக்கம்! மழையே நீ அந்த அன்னையைப்போல் மனங்கனிந்து பொழிய வேண்டும்!

.......நந்தம்மை ஆளுடையாள்
தன்னில் பிரிவிலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னி, அவள், நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழை ஏலோரெம்பாவாய்

இப்படி அன்பாணையிடுகின்றார்.

மேகமே! கடலைச்சுருக்கு! கருமையாய்க் கிளம்பு! மின்னலாய் வீசு! இடியை முழக்கு! வண்ணமிகு வில்லை வளை! வளம்பெருக மழையை எங்கள் அம்பிகையின் பேரருள் போலப் பொழி!

இப்படி ஆணையிட இவர்கள் யார்? தாயாகிப் படைத்துக் காத்து வளர்க்கப் போகும் இவர்கள் தெளிந்த தவமுனிவர்களா? இல்லை இளைய பெண்கள் தாம். இவ்வளவு வலிமை எங்கிருந்து வந்தது? தெய்வங்களா? தெய்வீகம் எங்கே உள்ளது? பாவை நல்லாரின் பங்கயக் கைநலம் பார்த்தல்லவோ இந்தப் பாரில் அறங்கள் வளர்கின்றன. முனிவர்கள் தங்கள் ஆன்மா கடைத்தேறத் தவம் புரிவர். தாய்க்குலமோ தம்மைச் சார்ந்தோர் வாழக் கற்புத் தவம் புரிவர். அந்தத் தவத்திற்கு இயற்கையையும் ஆணைகொள்ளும் ஆற்றல் உண்டல்லவா? எனவே ஆணையிடுகின்றனர். மழை குறைந்தால் வறட்சி! கூடினால் வெள்ளம்! இரண்டுமின்றி எங்கள் அன்னையின் அருள்போல் அளவோடு பெய்க என எச்சரிக்கின்றனரோ!

மேகக்கருமையில் மின்னலின் தோற்றத்தில், இடியின் ஓசையில், இறங்கும் மழைநீரில் அனைத்திலுமே, கிரியாசத்தி, ஞானசக்தி, இச்சாசத்தி, திரோதானசத்தி ஆகிய அன்னையின் அனைத்து நிலைகளையும் காண்கின்றனர் அந்தக் கன்னியர்.

உலகத்துப் பொருளியல் வாழ்க்கையில் நெஞ்சு ஈரம் வற்றிவிடும். அருளியல் வாழ்க்கையில் மனத்தில் அன்புநீர் சுரந்தவாறு இருக்கும்.

மக்கள் மனத்தில் அன்பு ஈரம் கசிந்தால் வானம் மழை எனும் ஈரம் சுரக்கும். மக்கள் வாழ்வில் அருளியல் பெருக்கமே பருவ மழைக்கு ஆக்கம்.

நாடு வாழ, மழை பொழிய, மார்கழி நோன்பெனக் குறிக்கோள் காட்டுகிறது இத் திருப்பாடல்.

பதினேழாம் திருப்பாடல்

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

விண்ணுலகத்திற்கு இல்லாத சிறப்பு இந்த மண்ணுக்கு உண்டு. முக்தி என்னும் பேரின்பம் பெற இந்த மண்ணிலே பிறந்தாக வேண்டும். விண்ணகத் தேவர்களுக்கு இல்லாத சிறப்பு இந்த மண்ணில் பிறந்த மானுடத்திற்கு மட்டுமே உண்டு. இந்த வகையில் வேறுள குழுவையெல்லாம் மானுடம் வென்று விடுகிறது. இந்த மண்ணில் உண்மையில் வாழும் மானிடம் முத்திப்போகம் காண்பது. முன்னைத் திருப்பாட்டில் அன்னை வழி அண்ணல் பொழியும் அருளைப் பாடினார். இந்தப் பாடலில் அந்த அருள் அமுதத்தால் விளையும் பேரின்பத்தையும் அதன் பெருமையையும் கூறுகின்றனர். நீராடும் ஒருத்தி கரையில் தனித்து நிற்கும் ஒருத்தியைக் கூவி அழைக்கின்றாள். வாச மலர் அணிந்த வண்டார் கருங்குழலி இங்கு வா. இன்று வரை எவரும் அறியா பேரின்பத்தை அடைய மார்கழி நீராட உடனே வா. என்ன அப்படி திகைக்கின்றாய்? திருமாலுக்குக் கிட்டாத திருவருள் பேரின்பம் சிறியோம் ஆகிய நமக்குக்கிடைக்குமா? என்று சிந்திக்கிறாயா? பிரம்மதேவனும் பெற்று மகிழாப் பேரின்பத்தை துன்பம் ஏதுமின்றி மனித இனம் பெறுவது எவ்வாறு என்று மயங்குகிறாயா? சொல்கிறேன் கேள். பிராட்டியின்

திருவருள் கொண்டு பெருமான் நம் மாசு அனைத்தையும் நீக்குவான். மாசகன்ற நம் மனக் கோயிலில் மட்டற்ற மகிழ்ச்சியோடு அவனே எழுந்தருள்வான்.

"செங்கணவன்பால், திசைமுகன்பால், தேவர்கள் பால்,
எங்கும் இலாததோர் இன்பம் நம் பாலதா?
பொங்கும் கருங்குழலி நம் தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி "

என்று கூறுகின்றாள்.

கரையில் நிற்பவள் உள்ளம் கரையவில்லை. கனியவில்லை, கற்சிலை என நிற்கிறாள். நீராடுபவள் மேலும் கூறுகின்றாள். மாதரசி, மண்ணிலே பிறந்தவள் தான் நீ. மீண்டும் மீண்டும் இப்படியே பிறக்க நீ தோன்றியது அன்று. பிறப்பைத் தவிர்க்க பிறவி எடுத்தவள் நீ. மண்ணில் கிடந்தவள் தான் நீ. இந்த மண் வாசனையைத் தலையிலேயே சுமந்து மடிந்து போவதற்கு அன்று. விண்ணுக்கும் எட்டாத வேதமுதற் பொருளை நீ போய் பிடிக்க வேண்டா. அவன் தானே பிடிபட வருகின்றான். ஆற்றலுக்கெல்லாம் அவன் தான் இருப்பிடம், வீரத்தின் பிறப்பிடமாய் விளங்கும் விமலன் அவன். எளியோரை ஆதரிக்க வருவான். தானே தன் தாமரை பாதங்களைத் தருவான். அப்படி தருவதற்கு என்றே அன்பர்களாகிய நம் உள்ளம்தோறும் குடியேறிவிட்டான். அருட்பார்வை கொண்ட அரசனாய் கொலு இருக்கின்றானே அந்தக் கோமான் இன்னுமா காணவில்லை அந்தப் பொன்னம்பலத்தானை? பெண்ணே வா, மண்ணை விட்டு வா அந்த மாதேவனின் அருள் மடுவில் நீராட மயங்காமல் ஓடிவா, நானிலம் முழுவதும் நலமெல்லாம் பெற்றுத் திகழ அந்த நாயகனைப் பாடுவோம் வா.

**செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழ
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.**

ஒப்பற்ற பொய் ஒன்று உன்னதத் தமிழில் உண்டு, அது தான் பொய்யான இந்த உடலுக்கு இடப்பட்ட மெய் என்னும் இனிய பெயர். அந்தப் பொய் உடலின் துணைக் கொண்டு தான் மெய்ப்பொருளை அடைய முடியும் என்பதால் அழகுத் தமிழ் அப்படி பேசுகின்றதோ? நில்லாத உடம்பைக் கொண்டு நிலைக்காத உலக இன்பத்தை அடைய பாடுபடுதல் அறிவீனம் அல்லவா? பிரபஞ்ச வாசனை என்னும் பெரிய பாரத்தை கீழ் இறக்காமல் மேல் சுமப்பது இழிவல்லவா? வணங்கத்தலை வைத்தான், வாழ்த்தி மகிழ வாய் தந்தான், உணர்ந்து உருக உளம் கொடுத்தான், அந்த உள்ளத்திலும் குடி புகுந்தான், எல்லையில்லாததோர் இன்பம் வழங்க அவன் இசைக்கின்றான். வாங்கத் தயங்கி வசை எய்தலாமா?

அவனருளால் சிவனை உள்ளத்தில் அமைத்து அவன் திருவடி பற்றி எங்கும் இல்லாத இன்பத்தைப் பெற வழி காட்டுகின்றது இத்திருப்பாடல்.

பதினெட்டாம் திருப்பாடல்

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

கிழக்கு வெளுக்கத் தொடங்கிற்று. இருள் பிரிய ஒளிக் கீற்றுக் கட்டவிழும் இளங்காலைப் பொழுது, இறைவனைப் பாடி நீராடிய மகளிர், செக்கர் வானத்தைச் சிந்தை மகிழப் பார்க்கின்றனர். நினைவிலும் சொல்லிலும் இதுவரை அரும்பெருஞ் ஜோதியாய் இருந்து அவர்களை ஆண்டவன் எவனோ? அவன் அளித்த ஒளி வெள்ளத்தோடு அல்லவா காலைக் கதிரவன் இன்னும் சற்று நேரத்தில் காட்சியளிக்கப் போகின்றான். காலையே போன்றிலங்கும் மேனியனாகிய கங்கை மணாளனைக் கண்ணார் அமுதமாய் விளங்கும் அண்ணாமலையானைப் பாடத் தொடங்குகின்றனர். அவனுடைய பாதத் தாமரைகளே அவர்களுடைய கீதத்தில் முதலிடம் பெறுகின்றன. அகந்தை கெட்ட தேவர்கள் அண்ணாமலையானின் பாத மலர்களைக் கண்டு வணங்குகின்றனர். ஆண்டவன் திருவடி ஒளியில் அவர்களுடைய முடிமணிகள் ஒளி மழுங்கிப் போகின்றன. செக்கர் வானம் சிவனை நினைவூட்டிற்று. காலை ஒளியில் மங்கிய நடசத்திரங்கள் வணங்கிய தேவர்களின் முடிமணித் தொகை ஒளியிழந்ததை நினைவூட்டின. பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரமனைப் பார்க்கும் அளவிற்குப் பக்குவம் அடைந்துவிட்டனர் அந்தப் பெண்கள்.

உலகின் இரவு விடிந்தது. உயிரின் வாழ்வும் விடிந்து மலர்ந்தது.

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறுஅற்றார்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகல,

எல்லாம் அவன், எங்கும் அவன், ஆண் அவன், பெண் அவன், அலியும் அவன், ஒலியும், ஒளிமிக்க விண்ணும், விண்ணுள் யாவும் அவனே, மண்ணும் அவன், மண் சுமந்த மற்றும் அவன். அவனன்றி ஒன்றுமில்லை. ஒன்றாய் நிற்பான், உடனாய் நிற்பான் வேறாயும் நிற்பான்.

"பெண் ஆகி, ஆண் ஆய், அலியாய்ப் பிறங்கு ஒளிசேர்
விண்ணாகி, மண்ணாகி, இத்தனையும் வேறாகி"

என்று பாடுகின்றனர்.

ஓரிடத்தில் ஒரு காலத்தில் ஓர் உருவோடு உள்ள பொருளைக் கண்டுபிடித்து விடலாம். எல்லா இடத்திலும் எல்லாமாக உள்ள பரம்பொருளை எப்படிக் காண்பது? ஒரு போதும் நம்மால் காணவியலாது. தன் எளிவந்தத் தன்மையால் அவன் தானே வருவான். நமக்கு ஞானக் கண் தருவான். அக்கண் பருகிக் களித்திட அமுதமுமாய் அவனே ஆவான். நாம் செய்ய வேண்டுவதெல்லாம் உளமுருகி அவன் திருவடியைப் பாடி, நீராட வேண்டுவது ஒன்று தான்.

"கண்ஆர் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம் புனல் பாய்த்து ஆடேலோர் எம்பாவாய்"

பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்க பக்க நின்று கேட்டாலும் ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டி

அணைத்தாலும் அத்தனைக்கும் தித்திக்கும் முக்கண் கரும்பு அவன். தேவருலக அமுதம் உடம்பைக் காக்கும். அண்ணாமலையான் திருவடி அமுதம் உயிரை அழியாமல் காக்கும். விண்ணோர் அமுதம் வீடு தராது. அண்ணாமலையான் அருளமுதம் பேரின்ப வீடு தரும். விண்ணோர் அமுதத்தை நாம் தேடிப் போக வேண்டும். அண்ணாமலையான் என்னும் அமுதமோ தானே வரும். அவனே அமுதன், அவனே அதன் சுவை. அவனே அதன் பயன்.

அவன் தாள் தொட்டுக் கிடந்தால் நம் தோள் தொட்டுத் தூக்கி அணைப்பான் என்று கூறும் அருள் தூதாக அமைகின்றது இந்த அற்புதத் திருப்பாடல்.

பத்தொன்பதாந் திருப்பாடல்

உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்குளங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்.

திருவெம்பாவையின் உயிர் மூச்சாக அமைவது இத்திருப்பாடல். நோன்பின் குறிக்கோளைத் தெளிவாகக் கூறுகின்றது. பயன் ஏதும் கருதாத முயற்சி இந்தப் பாரில் ஏதேனும் உண்டா? ஆணை, அதிகாரம், பதவி, பொருள் என்று பற்றை வளர்த்து, செருக்கை ஊட்டி சிற்றின்பத்தைச் சேர்க்கும் பயணமாகத்தானே உலகியல் வாழ்க்கை அமைந்துள்ளது. ஆனால் அடக்கம்,தொண்டு, அருள் ஆகியவற்றைத் தந்து செருக்கை விலக்கி, அகங்காரத்தை அழித்து நம்மைப் பேரின்பத்தில் கொண்டு செலுத்தும் பயணமாக நம்முடைய அருளியல் வாழ்க்கை அமைகின்றது. இறுதியில் முத்தியை அளிக்கும் மோனத்தவமாகவும் அதுவே மலர்கின்றது.

வேண்டத்தக்கதை அறிந்தவன் அந்த வேதமுதற்பொருள். வேண்ட முழுவதும் தருபவனும் அந்த வித்தகன்தான். அவனிடம் எதனை வேண்ட வேண்டுமோ அதனை, முற்றிலும் உணர்ந்து அவன்பாத மலர்களைப்பற்றி உறுதியாக வேண்டுகின்றனர் கன்னிப் பெண்கள்.

எங்கள் பெருமானே! அந்த அழைப்பில்தான்

எவ்வளவு உரிமை. உனக்கு ஒன்று சொல்கின்றோம் கேள். ஒன்று என்று நாங்கள் கூறுவது எண்ணிக்கையல்ல. ஒப்பற்றது என்று கவனித்துக் கொள். பெருமானே எங்கள் அறியாமையைப் பார்த்தாயா? நீ தமிழாய்ந்ததை மறந்து பொருள் கடந்த உனக்குப் பொருள் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். பொறுத்துக்கொள் ஐயா.

பருவங்கடந்த பரமாத்மா எங்களுக்கு மணப்பருவம் வாய்த்து விட்டது. எங்கள் தந்தையர், எங்களுக்கு வாழ்க்கைத் துணைவர்களாக வகுக்கும் ஆண்களிடம், அப்பா, "மாப்பிள்ளை இப்பெண்பிள்ளையை உன் கையில் ஒப்புக் கொடுத்து விட்டோம். இவள் உனக்கே அடைக்கலம்" என்னும் பழைய சொற்களைப் புதுப்பித்துக் கூறும் காலம் நெருங்கி விட்டதை நீ அறிவாயே அந்தக் காலம் தந்த அச்சத்தால் இந்தக் காலைப் பொழுதில் உன் கால் பிடித்து ஒன்று கூறுகின்றோம் எங்களுக்கு வாய்க்கும் கணவர் உன் அடியவராகத்தான் இருக்க வேண்டும். மாறாக அமைந்து விட்டால், ஐயோ நினைக்கவே உள்ளம் அஞ்சுகிறது. உன் அன்பர் அல்லாரை எம் உடல் ஒருபோதும் சேரக்கூடாது.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கு அப்பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான், உனக்கு ஒன்று உரைப்போம் கேள்
எம்கொங்கை நின்அன்பர் அல்லார் தோள் சேரற்க

பெருமானே நெற்றியில் திருநீறும் சிந்தையில் சிவப்பரம்பொருளும், செயலில் சிவனடியார் திருத்தொண்டும் கொண்ட உன் அன்பர்தாம் எமக்குக் கணவராதல் வேண்டும். அவருக்கே பணி செய்வோம். அப்பணியையே உனக்காக்கி உள்ளம் மகிழ்வோம். எங்களை உனக்கல்லால் பிறர்க்கு ஆளாக்கி விடாதே. சிவனடியார்க்கு உற்ற மனையாகி, கற்பு நிலை நின்று, மனத்தை

ஒருவழிப்படுத்திக் காணும் இடமெல்லாம் எம் கணவரையே இரவும் பகலும் எப்போதும் கண்டு வாழ்வோம். அவர்களை எப்போதும் எங்கும் காண்பது உன்னைக் காண்பதல்லவா. அந்தப் பெரு வரத்தை ஆண்டவனே எங்களுக்கு அருள்வாய். உன்னடியார் எமக்கு உற்ற கணவரானால் கதிரவன் திசைமாறி உதித்தாலும் எங்களுக்குச் சிறிதும் அச்சமில்லை. உலகம் தடுமாறினாலும் அச்சத்தால் எம் உள்ளத்தின் உறுதி தடுமாறாது.

எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எம்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கு எழில் என் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்.

என்று வேண்டி முடிக்கின்றனர். அச்சத்தில் தொடங்கிய பாட்டு அச்சமின்மையில் முடிகின்றது. அடியார்க்குத் தொண்டாற்றும் அற்புத வாழ்வைப் பாவை நோன்பின் பயனாகக் காட்டுகின்றது.

அது மட்டுமா? ஆன்ம வாழ்வின் துணைவராக சிவனடியார்களே அமைய வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாக அறிவிக்கின்றது. ஏன்? வன்பெரு நெருப்பினைப் புன்புழுப் பற்றுமோ? வானை ஒரு மான் தாவுமா? வலியுள்ள புலியை ஓர் எலி சீறுமா? வச்சிரத் தூணை ஒரு துரும்பினால் துண்டாக்க இயலுமா? பெரிய மலையை ஓர் ஈ சிறகினால் துன்புற அசைக்குமா? சூரியனை இருள் வந்து சூழுமா? இல்லை அதுபோலச் சிவனடியார் கொண்ட உள்ள உறுதியை உலகியற் சழக்குகள் ஒருபோதும் அசைத்திடா.

அடியார்களின் தொடர் ஒன்றுதான் சிவக்கற்பைக் காத்துக் கொள்ளச் சீவர்க்குத் துணைபுரியும் என்று செம்மை நெறி கூறுகின்றது இத்திருப்பாடல்.

இருபதாந்திருப்பாடல்

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்.

உலகியல் உறக்கத்தை உதறி எறிந்தனர். ஆன்ம உறக்கத்தை அகற்றித் தள்ளினர். பாவை நோன்பு கொள்ளும் பாவையர் துயிலுணர்ந்தனர். வீதி வழி நடந்தனர். ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை, தேசனை, சிவலோகனை, தில்லைச் சிற்றம்பலத்தானை, அத்தனை, ஆனந்தனை, அமுதனை, விண்ணுக்கொரு மருந்தை, வேத விழுப்பொருளை, கண்ணுக்கினியானை, மாலறியா, நான்முகனும் காணா மலையினை, தானே வந்து தலையளித்து ஆட்கொண்டருளும் பெருமானை, பல அமரர் உன்னற்கரியானை, ஒருவனை, இருஞ்சீரானை, முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளைப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனை, வாழ்த்திப் பாடி, வைகறையில் நீராடி நோன்பு மேற்கொண்டனர். முக்கட் பெருமான் முற்றும் அருள் புரிந்தான்.

நாடு செழிக்க நல்ல மழை பொழிகிறது. வீடு சிறக்க நல்ல கணவன் வாய்த்து விட்டான். அச்சம் அகன்றது. கவலை விலகியது. உறக்கம் தொலைந்தது. துக்கம் அழிந்தது. எங்கும் இன்பம். நோக்கும் திசையெல்லாம் இறைவன் தோற்றம். எத்தொழிலும் திருத்தொண்டு எல்லாம் சிவபோகம். மறைமுதல்வன் அளித்த மனநிறைவு இது.

இவையெல்லாம் என்றும் நிலைக்க அவன் இன்னருள் வேண்டுமே எல்லாவற்றிற்கும் காரணமாய்க் காரியமாய், ஆதியந்த நடுவாய் அமைந்திருக்கும் அவன் திருவடியைப் போற்றத் தொடங்குகின்றனர். ஆதியாம் பாதமலர் அகிலத்தை மலர்விக்கின்றன. அந்தமாம் திருவடித் தளிர்கள் அனைத்தையும் தளிர்க்கச் செய்து தழைத்துப் பெருகத் தண்ணருள் பொழிகின்றன. மனம் மலர்ந்து, உடல் தளிர்த்து அத்திருவடிகளைப் போற்றுகின்றனர் அப் பொற்றொடியார்.

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்.

படைப்பிற்கு முதற்காரணம் அவனுடைய சீறடிகள். காப்பவையும் அந்தக் கழல்கள். எல்லாவுயிர்க்கும் போகம் தருவனவும் அவனுடைய பூங்கழல்களே. பிரபஞ்சத்தில் அனைத்தும் அதனதன் காரணத்துள்ளே ஒடுங்க, இறுதியில் அக்காரணங்களையும் தன்னுள் ஒடுக்கி நிற்கும் ஒப்பற்ற திருவடிகளை உளங்கனிந்து,

போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்

என்று பாடிப் பரவுகின்றனர். தாயை அறியாத கன்றை இந்தத் தரணியில் பார்த்ததில்லை. கன்றை அறியாத தாயையும் நாம் கண்டதில்லை. உலகின் தாயாம் இறைவன் கன்றுகளாம் நம்மை அறிகின்றான். நாமே தாயாகிய அவனையும் அறியவில்லை, நம்மையும் அறிந்து கொள்ளாமல் திகைக்கின்றோம். அறியாமையில் நாம் மட்டுமா உழல்கின்றோம். நான்முகனும் தேவரும்கூட அல்லவா மயங்கித் தடுமாறுகின்றனர். இந்த மறைப்பையும் அருளி, அந்த மாய மறைப்பு நீங்க, அருள் விழிப்பையும் அருளுவன

அந்தத் திருவடிகளே அடியார் திருக்கூட்டம் உய்யுமாறு அருள் புரியும் அந்த அற்புதத் திருவடிகளைப் போற்றுகின்றனர்.

போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்.

ஆதியாகி, அந்தமாகி, படைப்பதாகிக் காப்பதாகி, அழிப்பதாகி, மறைப்பதாகி, அருள்வதாகி, அனைத்துமாகி நிற்கும் திருவடித் தாமரையைப் போற்றி மார்கழித் திங்களில் மட்டுமின்றி, வாழ்வையே மார்கழியாக்கி அவன் பொழியும் அருட்புனலுள் ஆட விரும்புகின்றனர் அந்த ஆன்மச் சிறுமியர்.

தீராத வல்வினை தீர்க்கின்ற பாதத்தை,
ஓங்கார பீடத்தில் ஒளிர்கின்ற பாதத்தை,
பாடிய வேதங்கள் தேடிய பாதத்தை,
பத்தி செய் பக்தர்க்குத் தித்திக்கும் பாதத்தை,
நல்லவரெல்லாம் நயக்கின்ற பாதத்தை,
தாங்கி நமைப் பெற்ற தாயாகும் பாதத்தைப்
போற்றுகின்றனர்.

மழையால் நாடு செழிக்க, கணவனால் வீடு சிறக்க, அடியார் திருக்கூட்டத்தால் ஆன்மா உயர, அனைத்திற்கும் மேலாக இந்த அகிலமெல்லாம் அந்த அரும்பெரும் சோதியின் அருள்புனலில் ஆடிப் பேரானந்தப் பெருநிலை பெற்றுய்ய, மணிவாசகப் பெருமான் அருளிய ஆன்மீக அருள் வெள்ளம் திருவெம்பாவைத் திருப்பாடல்கள்.

திருப்பள்ளியெழுச்சி

'முதல் பாடல்'

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே!
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்!
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
ஏற்றுயர் கொடியுடை யாய்எமை யுடையாய்!
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே!

உலகத்தில் ஒளி பரவிவிட்டது. விடிந்து விட்டது. பொழுது விடிந்தாலே கவலைகள் எல்லாம் விட்டது போல் ஓர் உணர்ச்சி. இருளிலே கண்டறிவதில்லை அறியாமை. இருள் செறிந்த இரவிலே எந்தத்துன்பமும் மிகுந்து விடுகிறது. எப்போது விடியும் என்று இருக்கிறது. இருளே துன்பம். இருளிலே ஒன்றை மற்றொன்றாகக் கருதி ஐயப்படவும் திரிபாக முடிவு செய்யவும் நேர்ந்து விடுகிறது. இருளே மயக்கம் அறியாமையும் துன்பமும் மயக்கமும் நீங்க இருள் விலக ஒளி பரவ வேண்டும். புறத்திலே ஒளி பரவினால் மட்டும் போதாது அகத்திலே ஆன்மாவிலே ஒளி பரவ வேண்டும். திரோதான சுத்தி பெற்று ஆன்ம ஒளி எய்தி உயிருக்கு உயிராக இறைவனை எப்போதும் புறம்போக ஒட்டாமல் சிக்கெனப் பிடித்து வைத்திருந்த மணிவாசகப் பெருமானார் சிவபெருமானையே துயில் உணர்த்துகின்றார். நாம் எல்லோரும் விழித்து எழுந்து விடிவு காணுமாறு பெருமானுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடுகின்றார். அழுக்குப் படியாத மேனிஉடைய ஆண்டவனுக்கு அபிஷேகமா? பசிக்காத பெருமானுக்கு நிவேதனமா? எங்கும்

இருப்பவனுக்கு தங்கும் இடமாகத் திருக்கோவிலா? வியர்க்காதவனுக்குச் சாமரமா? ஒளிப் பிழம்பாகி நிற்பவன் திருமுன் கற்பூர ஆரத்தியா? உறங்காதவனுக்கு திருப்பள்ளியெழுச்சியா? இந்த உலகத்தில் மானிட தலைவனுக்கு அவன் தொண்டர்கள் எவற்றை செய்வார்களோ அவற்றையெல்லாம் ஆன்ம நாயகனாகிய இறைவனுக்கு அடியார்கள் செய்கின்றனர். அனைத்தையும் அவன் உவப்போடு ஏற்கின்றான். திருப்பள்ளியெழுச்சியை தொடுக்கின்றார் மணிவாசகர்.

உலக வாழ்க்கையில் நல்ல முதலீடு செய்யவேண்டுமே? முதல் அழிந்தால் வாழ்வே அழிந்ததாகத்தானே பொருள். அழியாத முதலை தேடுகின்றான். சென்றடையாத திருவுடையான் சிவபெருமானைக் கண்டு கொள்கிறார். ஒன்றைச் சேர்த்தாலும் மிகாது ஒன்றை எடுத்தாலும் குறையாது என்றும் ஒன்றாய் நின்று நிலவும் பரிபூரணனைக் கண்டு பிடித்துக் கொள்கின்றார். நெஞ்சு நெக்குருக அவனைப் போற்றிப் பரவி தொடங்குகின்றார். "போற்றி என் வாழ் முதலாகிய பொருளே" சிவபெருமானைச் சேமவைப்பாக மூல பண்டாரமாக முதலாக கைப்பற்றியவுடன் ஆன்மாவிற்கு விடிந்துவிட்டது. புலர்ந்தது என்று தொடர்ந்து பாடுகின்றார். ஆண்டவனே பொழுது புலர்ந்து எழுந்திராய். நாங்கள் ஒன்று கொடுத்து ஒன்று வாங்கிப்போக வந்திருக்கிறோம். முதல் தேடிக்கொண்ட நாங்கள் வணிகர்கள். சோலையிலே புகுந்து மலர்களைப்பறித்து கையேந்தி நின்றோம். கைநிறைந்த மலர்கள் கண் நிறைந்தன. பொலிவினாலே, அழகினாலே தேன் துளித்தாலே அம்மலர்கள் உன் திருவடிகளைப் போன்றன. மலர்களைக் கண்டு, திருவடி நினைந்து, உன்னைத் துதித்து வருகின்றோம். உன் அருள் மலரும் திருமுகத்து அழகிய புன்முறுவல், நகை, நாங்கள் பெற உன் திருவடிகளைத் தொழுது நிற்கின்றோம். ஆண்டவனே எழுவாய் எமக்கு பயன் நிலைதருவாய்

....புலர்ந்தது பூங்கழற்கு இணை துணை மலர்கொண்டு
ஏற்றி, நின் திருமுகத்து எமக்கு அருள்மலரும்
எழில் நகைகொண்டு, நின் திருவடி தொழுகோம்

இங்கே மலர்களைக் கொடுத்து நகை வாங்கப் பார்க்கிறார் மாணிக்கவாசகர். "**தந்தது, உன் தன்னைக் கொண்டது, என் தன்னைச் சங்கரா! ஆர் கொலோ, சதுரர்?**" என்று கேட்டவர் ஆயிற்றே? தக்க துறையைச் சார்வித்து வாதவூரரை அருட்கடலில் மூழ்கச் செய்தான் சிவபெருமான். அமைச்சன் வாதவூரனை அடிமை மணிவாசகர் ஆக்கிவிட்டு ஆண்டு கொண்டான். ஆண்டுகொண்ட அத்திருப்பெருந்துறையிலே கோயில் கொண்டுள்ள ஆன்ம நாயகனை எழுப்புகின்றார் மணிவாசகர். திருப்பெருந்துறை தலத்திலே வயல்கள். வயற் சேற்றிலே பயிர்களுக்கிடையே பல்லிதழ் தாமரைகள். அவை மலரத் தொடங்கி விட்டன. பொழுது விடிவதற்கு அடையாளம். அறங்காட்டி ஆட்கொள்ளவரும் பெருமான், கொடி கட்டியிருக்கிறான். வெண்மையான ஆனேற்றுக் கொடி ரிஷபக் கொடி, கொண்டு, அறங்காட்டி தலைக்கட்டும் பெருமான் மணிவாசகரை, ஆண்டு கொண்டான் அவனை எம்பெருமான் என்றழைத்து, பள்ளியெழுமாறு வேண்டுகின்றார்.

சேற்று இதழ்க் கமலங்கள் மலரும் தண்வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
ஏற்று உயர்கொடி உடையாய் எமை உடையாய்
எம்பெருமான் பள்ளி யெழுந்தருளாயே

பிரபஞ்சச் சேற்றிலே உலகியல் இன்பமாகிய பயிரும் உண்டு. இடையே மலரும் தாமரையாகிய இறைவனின் திருவருள் வெளிப்பாடும் உண்டு. உலகியல் இன்பத்தைக் குறிக்கொள்ளாது இறைவன் திருவருளைப் பற்றுவார்க்கு, வாழ் முதலாகிய பொருள் கிட்டி, பொழுது விடிந்து விடுமென்று யாவரும் எழப் பாடுகின்றது இத்திருப்பாடல்.

இரண்டாம் பாடல்

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே!
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே.

கதிரவன் தேர் புறப்பட்டு விட்டது. இந்திரன் திசையாகிய கிழக்கிலே அருணோதயம். கீழ்வானம் செக்கரித்து விட்டது. சிறுகச் சிறுக இருள் விலகுகின்றது. மணிவாசகர் பரவசமுற்றுப் பாடுகின்றார். ஆண்டவனே! உன் மலரும் திருமுகத்தைப் போல அருணோதயம் ஆயிற்று. இருள் விலக உன் திருமுகத்தே காணப் பெறும் கருணையைப் போலக் கதிரவன் எழுகிறான். பரிதி வட்டம் பார்க்கப் பார்க்க உன் திருவருளே தோற்றுகின்றது. அதுமட்டுமா? கதிரவன் ஒளிபட்டுத் தாமரைகள் மலர்கின்றன. அவை உன் திருவருள் புலப்பட மலரும் உன் கண்களே போல்வன.

அருணன், இந்திரன் திசை அணுகினன், இருள்போய்
அகன்றது, உதயம் நின் மலர்த் திருமுகத்தின்
கருணையின் சூரியன் எழ எழ, நயனக்
கடிமலர் மலர

இறைவனே உன் கருணைக் கண்மலர்கள் மலர்ந்தால் வேறென்ன வேண்டும்? தாமரைகள் மலர, வண்டுக்கூட்டம் தேனுண்ண மலர்களைக் கூடி, மொய்த்துப் படிந்துப் பாடி நிற்கின்றது. திருப்பெருந்துறை உறையும் சிவபெருமானே பொழுது புலர்ந்தது துயிலுணர்ந்து, ஃரி நிமிர்ந்து, போதந்து

எமக்கு அருள வேண்டாமோ?

.... மற்று அண்ணல் அம் கண் ஆம்
திரள் நிரை அறுபதம் முரல்வன இவைஓர்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!

வாழ்முதலாகிய சிவபெருமானைப் பெற்றுக் கொண்ட மாணிக்கவாசகப் பெருமான் அவன் பேரருளை நினைக்கிறார். அவன் வழங்கிய பேரின்பத்தைக் கருதுகின்றார். அவன் உயர்வைக் காண்கிறார். இறைவன் அருளையும், இன்ப நிலையையும் உயர்ச்சியையும் ஒரு சேரச் சொல்கிறார். உலகில் உயர்ந்தது மலைதானே! மலையில்லா விட்டால், மழை ஏது? வளம் ஏது? வாழ்வு ஏது? இறைவனை மலை என்கிறார். மலை நிமிர்ந்து, உயர்ந்து கருமேகம் தன்மேல் படிய தன்னைக் காட்டிக் கொண்டு, அசையாமல் நிற்கின்றது. ஆனால் சிவபெருமானாகிய மலையோ எல்லாவற்றிலும் உயர்ந்து, நிமிர்ந்து நின்றாலும் அருள் நிதியமும் ஆனந்தமும் தர ஓடி வருகின்றதாம். அருள் நிதி தரவரும் ஆனந்த மலையாகச் சிவபெருமானைக் கண்டு, கொண்டாடுகின்றார் மாணிக்கவாசகர்.

திருபெருந்துறை உறை சிவபெருமான் அருட்கவி மழை பொழிய வந்த பக்குவச் சூல்கொண்ட கார்மேகமாகிய மாணிக்கவாசருக்காகத் தன்னைக்காட்டி, வந்து, பேரானந்தத்தை அவர் ஏற்புத் துளைதோறும் ஏற்றி, பெரு வெள்ளமாகத் திருவாசகம் பெருக்கெடுக்க, சொல்லும் பொருளும் வழங்கினான் அன்றோ? அருள்நிதி தரவரும் ஆனந்த மலையாகிய சிவபெருமான் நம்மைப் பொறுத்தவரை மாணிக்கவாசகரையே அருள்நிதி தரவரும் ஆனந்த மலையாக்கிவிட்டான். எல்லாவற்றினும் உயர்ந்தவனை மலையே என்றார். அவன் ஆழ்ந்தும் உள்ளானே? மண்ணிலே ஆழ்ந்து, அளப்பரிய ஆழமுடையது

கடல்தானே! கடலுக்குள்ளே கண்டும் காணாமலும் எவ்வளவு வளங்கள்? இறைவனைக் கடலாகவும் காண்கிறார் மணிவாசகர். விண்ணுக்கு ஏறுவது மலை; மண்ணிலே கண் காணாத ஆழத்திலே புகுவது கடல். சிவபெருமான் அலைகடலாம். பெரிய இரைச்சலோடு அலைகின்றது கடல். ஏன்தெரியுமா? தன்னை மொண்டு கொள்ளத்தக்க மேகம் உரிய போதில் வந்து படியவில்லையே என்ற ஏக்கம் கடலுக்கு. விண் நோக்கி எழுந்து பார்க்கிறது அலை. மேகம் வரவில்லையா? மண்ணிலே, தரையிலே அடித்துத் தலையை மோதிக் கொள்கிறது. அலை பாய்ந்து, பாய்ந்து, பேரொலி எழுப்பிக்கடல் அரற்றுகின்றது. மணிவாசகராகிய கவிமழை பொழிய வேண்டிய மேகத்தை எதிர்நோக்கிய அலைகடல் ஆண்டவன். சிவபெருமான் திருவடிக்குத் தாம் அவனருளால் ஆக்கிய கவிமழையைப் பொழிந்த மேகம் மாணிக்கவாசகர். அவர் கவிமழையை திருமுடிமேல் ஏற்றுக் குளிர்ந்த மலை சிவபெருமான். அவர் கவிக்கு இசையிட்ட அலைகடல் சிவபெருமான். அவனையே கண்டுருகிப் பாடி நிற்கின்றார். மணிவாசகர் துயிலெழுப்புகின்றார்.

.......“திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
அருள்நிதி தர வரும் ஆனந்த மலையே!
அலைகடலே! பள்ளி எழுந்தருளாயே!”

சிவபரம்பொருளாகிய அக்கடலில் ஒளியில் விளைந்த ஞானமலைமேல் படிந்து, சொரியும் ஆனந்தத் தேன் மழையில் ஆன்மா சுகிக்க எழுந்து வர அழைக்கின்றது. இத்திருப்பாடல்.

மூன்றாம் பாடல்

கூவின பூங்குயில்! கூவின கோழி!
குருகுகள் இயம்பின! இயம்பின சங்கம்!
ஓவின தாரகை யொளியொளி உதயத்து
ஒருப்படு கின்றது! விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்!
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
யாவரும் அறிவரி யாயெமக் கெளியாய்!
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

உலகத்தில் இயற்கைப் பொருட்கள் எல்லாம் ஒரு நியதிக்கு உட்பட்டுள்ளன. தன்னையே பெரிதாகக் காணாமல் உலகத்தைக் காண வேண்டிய முறைப்படி கண்டால் தன்னின் சிறுமையும் உலகின் பெருமையும் முறைமையும் புரியாமல் போகாது. உலகத்தின் நியதி என்ற ஒன்று அறிவிற் சிறந்த மனிதர்க்கும் மேற்பட்டது. என்றும் உலக நியதி பிசகாமல் இருப்பது தெரிந்து விட்டால் உறுதியாக இறைவனை உணர்ந்து கொண்டு விடலாம். இயற்கையின் நியதியில் உறங்கும் நேரத்து உறங்கி, எழும் நேரத்து எழுந்து விடுகின்றன பறவைகள். எழும் நேரத்தும் எழாமல் கிடப்பவர்கள் அறிவுள்ள மனிதர்கள் தாமோ? திருப்பள்ளி எழுச்சியில் மணிவாசகர் எழுப்புகின்றார். மெத்தென்ற பூப்படுக்கையை விட்டெழுந்து குயில்கள் கூவுகின்றன. கோழிகளும் எழுந்து கூவுகின்றன. மற்ற பறவைகளெல்லாம் கூடு விட்டுப் புறப்பட்டு ஆர்க்கின்றது. திருக்கோயிலிடத்தே சங்குகள் ஒலிக்கின்றன. அறிவற்ற உயிராகிய சங்கு தன் உடலைக் கொடுத்துத் திருக்கோயிலில் விடிமங்கலக் குறியாக முழங்கி ஆறறிவு பெற்ற மனிதர்களை ஆண்டவன் பணிக்கு அழைக்கின்றது. எழுக!

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின, இயம்பின சங்கம்

பெரும்பாலும் உறங்குபவர்களை எழுப்புவதானால் ஓசைப்படுத்தித்தான் எழுப்ப வேண்டும். கூப்பிட்டோ, கதவு தட்டியோ எழுப்புவோம் விடிந்ததற்கு அடையாளமாக குயில், கோழி, பறவைகள், சங்கு இவற்றின் ஓசை அடையாளங்களை முன்னர் காட்டுகின்றார் மாணிக்கவாசகர். நள்ளிரவில் ஓசை கேட்டு எழுந்தாலும் வேறு ஓசையோ என்று ஐயப்பட இடமுண்டு. வேறு ஓசை கேட்டு எழுந்தவர்கள் இரவு என்று தெரிந்தால் மீளப் படுத்து உறங்கி விடுவார்கள். இவ்வாறு உறங்காமலிருக்க ஓசை அடையாளம் காட்டிய பின்னர் ஒளி அடையாளமும் சுட்டி விடிந்தது என்று எழுப்புகின்றார். வானத்திலே உதயமாகி ஒளி பரவி விட்டது. நட்சத்திர கூட்டம் ஒளி மங்கி, விண்ணில் கதிரொளி மண்ணிற்கும் பரவி விட்டது. உலகத்து உண்மை நியதியைக் கண்டு எழும்போது மெய்யுணர்வு தோன்றி விடுகின்றது. சிற்றின்பச் சூழல் விலகி, பேரின்பப் பக்குவம் உண்டாகின்றது. கதிரவன் ஒளி பரவ நட்சத்திர ஒளி மங்குதல் போல, ஞான ஒளி பரவ, அஞ்ஞான இருள் கெடுதலோடு சிற்றின்பச் சிறுமைப் பற்றும் மங்கி விடுகின்றது.

ஓவின தாரகை, ஒளி, ஒளி உதயத்து ஒருப்படுகின்றது. எங்களுக்கெல்லாம் விடிந்து விட்டது. திருப்பெருந்துறை உறையும் சிவபெருமானே, உன் அடிமைகளாகிய நாங்கள் எல்லோரும் உன்னருளால் எது விடிவு? என்று உணர்ந்து எழுந்து விட்டோம். ஆண்டவனே! அடிமைகளுக்குரிய கூலியும் பரிசும் வழங்க நீ வந்தாக வேண்டுமே! எங்கள் பக்குவம் அறிந்து நாங்கள் விரும்ப நீ விரும்பி, உன் திருவடிகளை எங்களுக்கு உணர்த்தி அருள்க! கதிரவன் ஒளி கண்டும் கதிரவன் ஒளி மட்டுமே காணவோ நாங்கள் எழுந்தோம்? உன் பேரொளி கண்டும், காணவும் அல்லவா

நாங்கள் உணர்ந்து எழுந்தோம். தேவ! ஒளி மயமானவனே! எமக்கு அருள எழுந்தருள்க! என்று மணிவாசகர் சிவபெருமானுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடுகின்றார்.

..... விருப்பொடு, நமக்குத்
தேவ நல் செறி கழல் தாள் இணை காட்டாய்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!

பெருமானே! செல்வத்தில் மிகுந்தவர்க்கோ, உலகியல் கல்வியில் சிறந்தவர்க்கோ இம் மண்ணில் மட்டுமின்றி, விண்ணிலும் பதவியில் உயர்ந்தவர்க்கோ யாவரே ஆயினும் தம்மையே உயர்த்திக் காணும் அகந்தை உடையார்க்கு நீ என்றும் அருமையானவன் என்பதை நாங்கள் அறிந்து கொண்டுள்ளோம். உலகத்தைக் கண்டு, உண்மை உணர்ந்து, எங்கள் சிறுமை தெரிந்து உன் அருளால் செருக்கற்று நிற்கும் அடியார்கள் நாங்கள் எங்களுக்கு நீ எளிமையில் பிடிபடுவாய் என்பது தெரிந்தே வந்துள்ளோம். எம்பெருமானே! எழுந்தருள்க! என்று மணிவாசகர் இறைவனை எழுப்புகின்றார்.

யாவரும் அறிவு அரியாய், எமக்கு எளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே!

உலகத்தை உள்ளவாறே கண்டு, ஐயமும் திரிபும் அற, அவிச்சை இருள் கெட்டு, சிற்றின்பச் சார்பு ஒழிந்து, உதயமாகிய திருவருள் ஞானஒளி வழங்க, இறைவன் திருவடியைப் பற்றுமாறு ஆன்மாவை உசுப்பி, எழுப்பி, ஆண்டவனை எதிர் நிறுத்துகின்றது இத்திருப்பாடல்.

நான்காம் பாடல்

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்!
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்!
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்!
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்!
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

அவரவர் தாம் அறிந்தவற்றை ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்த காலம்; வாழ்வில் தேடியவற்றையெல்லாம் இறைவனுக்கு ஆக்கிய காலம்; கலையும் கல்வியும் தொழிலும் வாழ்வும் திருக்கோயிலைச் சார்ந்து சிறந்த காலம். நல்ல பணியாரம், நல்ல பொன்னாரம் இறைவனுக்கு, நல்ல மலர்மாலைகள் நவமணிகள் அவனுக்கு, இயலும் இசையும் கூத்தும் ஓவியமும் சிற்பமும் அவனுக்கே. நாட்டின் தலைவனாகிய அரசன் மாளிகையைக் காட்டிலும் உலகத்தின் ஒரு தலைவனாகிய இறைவனுக்குப் பெருங்கோயில் அமைத்த காலம். நற்குணம் மாறாத அழகும் உண்மை மாறாத நீதியும் ஒழுக்கம் மாறாத அறமும் நேர்மை மாறாத பக்தியும் செழித்த காலம். திருப்பெருந்துறை தலத்துப் பெருங்கோயில் ஆன்ம நாயகன் சந்நிதி இருள் விலகி, ஒளி பரவ அடியார் கூட்டம் சந்நிதியில் குழுமியிருக்கின்றது. மாணிக்க வாசகர் பார்க்கின்றார். இறைவன் சந்நிதியில் இனிய வீணை இசை பயிற்றி நிற்பார் சிலர். இனிய யாழின் இசை எழுப்புகின்றார் ஒருபால், வேதம் ஓதி நிற்பாரும், துதிப்பாடல்களை இசைப்பாரும் ஒருபுறம். நல்ல மலர்களைக் கொண்டு அழகுற கட்டப் பெற்ற நல்ல மாலைகளை கையேந்தி நிற்கின்றனர் சிலர்.

இன்இசை வீணையர், யாழினர் ஒருபால்.
இருக்கொடு தோத்திரம் இயம்பினர், ஒருபால்

தம்மின் தாழ்வும் இறைவன் உயர்வும் கண்டுணர்ந்து அவனையே தொழுதவாறு உள்ளனர் சிலர். தாய்க் கருணைக்காகப் பிள்ளை அழுது நிற்பதைப் போல, ஆண்டவன் அருள்நினைந்து அழுது நிற்பார் சிலர். தேட்டமற்ற திருவருளைப் பெறாதாரைப் போலத் துவண்டு உள்ளுருகி நிற்பார் சிலர். தலைக்கு மேலே கைகளைக் கூப்பி, இனி எம்மால் ஏதுமாகாது உன்னையே அடைக்கலமாகப் புகுந்தேன் என்று காட்டி அஞ்சலித்து நிற்பார் சிலர்;

....தொழுகையர், அழுகையர், துவள்கையர் ஒருபால்,
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்

ஏற்றம் மிக்க அடியார்கள் இறைவன் முன்னே அவனுக்கென்று ஒன்று கொண்டோ உள்ளுருகியோ நிற்கின்றனர். ஏதுமில்லாமல் கசிவில்லாமல் கல்லேயாகி நின்றாலும் சிவபெருமான் முன் நின்றால் போதும்; அடியார் கூட்டத்துள் அகப்பட்டு, அவனைக் கண்டு நின்றாலே போதும்; இறைவன் இன்னருள் புரிவான். அடியார் எல்லோரும் வீணையர், யாழினர், கையேந்திய மாலையர், தொழுகையர், அழுகையர், துவள்கையர், அஞ்சலித்தவர் என்று இவ்வாறு நிற்க, மணிவாசகர் கண்டு தாம் யாராகி நின்றாரோ? நாம் அறியோம். அவர் கண்டவற்றை நாம் காணுமாறு பாடுகின்றார். நமக்காகப் பாடுகின்றார். அடியார் எல்லோரும் இவ்விவ்வாறு உயர்ந்து நிற்க; உருகிநிற்க; மனம்மொழி மெய்களால் அவனையே பற்றி நிற்க; ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் அவனுக்கே தந்து நிற்க தாம் ஏதுமில்லாமல் இருந்தும் இறைவன் இன்னருள் புரிவான் என்று மணிவாசகர் உறுதி காட்டி, திருப்பெருந்துறை உறை சிவபெருமானைப் பள்ளியெழுந்தருள வேண்டுகின்றார்.

.....திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
என்னையும் ஆண்டுகொண்டு, இன்அருள்புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே

தனக்கென்று ஒன்று வேண்டாது, எல்லோரினும் பெரியவன், அரியவன், ஆற்றலான், செல்வன் சிவபெருமான் இன்னருள் வழங்க என்றே காத்து நிற்கின்றான். உன்னைச் சுற்றிலும் பார்; உன்னுடையன எல்லாம் அவன்தந்தன என்பது உனக்குப் புரியும். மனிதர் செய்த உதவிக்கென நன்றி பாராட்ட வேண்டும் என்ற நீதி உணர்ந்த உனக்கு ஆண்டவனுக்கு என்றென்றும் நன்றி காட்டத் தோன்றுமல்லவா? ஆண்டவனை நோக்கி, அனைத்தையும் விட்டு, உருகி நிற்கும் அடியார் கூட்டத்தை உற்றுப்பார் உன் தாழ்வோடு நன்றியும் காட்டி, நாயேன் நாயேன் என்று நீயும் அரற்றத் தொடங்கி விடுவாய். நாயான நீ என்று கருதாமல் என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும் சிவபெருமான் நம்மையெல்லாம் திருவருளுக்கு ஆளாக்கி விடுவான். அவ்வாறு திருவருளுக்கு ஆளாகுமாறு அழைக்கின்றது. இத்திருப்பாடல்.

ஐந்தாம் பாடல்

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம் உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா!
சிந்தனைக் கும்அரியாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

தோற்றமும் நிலைபெறுதலும், அழிதலும் கொண்டது பிரபஞ்சம் ஆதலால் இவ்வுலகப் பொருட்கள் அவன், அவள், அவை என்று சுட்டி அறியப்பெறுவன. இவ்வுலகப்பொருட்கள் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்றும் ஐம்பெரும் பூதங்களின் சேர்க்கை உடையன. பௌதீகமானது உலகம். உலகத்தின் ஒவ்வொரு அணுவிலும் அதன் நுண்மையிலும் ஊடுருவி நிற்கின்றான் இறைவன். எங்கும் நிறைந்துள்ள இறைவனை ஒன்றைச் சுட்டி இவனே இறைவன் என்னவும் இயலாது. எதனுள்ளும் அவன் இல்லை என்னவும் இயலாது. நாம் ஓரிடத்திலிருந்து ஓரிடம் போகிறோம், வருகிறோம். போக்கும் வரவும் நமக்குண்டு இறைவன் எங்கும் என்றும் இருப்பவன். எங்கும் அவன் போவதில்லை, ஆதலால் அவன் எங்கும் வரத்தேவையில்லை. அவன் போகாதே போக வல்லவன்; வாராதே வர வல்லவன். உயிருக்கு உயிராகி உள்ளும் புறமுமாய் யாவுமாகி எல்லாக் காலத்தும் நிற்கின்ற பெருமானை மெய் அறிவு பெற்ற ஞானிகள் துதித்துப் பாடுவர். கருணை வெள்ளத்தில் அகப்பட்டு ஆடுவர். அவனை முற்றிலும் கண்டார் இலர். பாச ஞானம் பசு ஞானம் விட்டு அவனை பதி ஞானத்தால் கண்டார், விண்டார் இலர். சுட்டி அறிபொருளாக

அவனைக் காட்டி ஒருவர் சொல்ல இதுகாரும் கேட்டறியோம். மாணிக்க வாசகப் பெருமான் ஆண்டவன் அருமையை அனைத்துமாம் திறனை பரம் பொருள் தத்துவத்தைப் பாடுகின்றார்.

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம் உனைக் கண்டறி வாரை

பயிர் செழித்த, குளிர்ந்த வயல்கள் நிறைந்த திருப்பெருந்துறை. அத்தலத்து திருக்கோவிலிலே மன்னனாக வீற்றிருக்கிறான் சிவபெருமான். பௌதீகமான உலகத்தில் மாயையின் விளைச்சல் உண்டாக வினைப்பயனாக உடம்பொடு உயிரை உலவவிட்டு ஆட்டி வைக்கும் மன்னனாக விளங்குகிறான். இறைவன். வயலிலே பயிர்செழிக்க, உழைப்பாளி உள்ளம்குளிர, அவரவர், உழைப்பிற்கேற்ற ஊதியம் வழங்க, உலகை ஆளும் மன்னனாக சிவபெருமான் திகழ்கின்றான். எல்லோரினும், எல்லாவற்றினும் அரியன், பெரியன் இறைவன் என்றும் அவனை காணலாகாது, என்றும் கருதிக் கிடந்ததுப் போக அவன் எளியனாக, ஆண்டானாகத் திருப்பெருந்துறையில் கோவில் கொண்டு அருளோடு வீற்றிருத்தலைக் கண்டாயிற்று. சிந்தனைக்கு அரியான் அடியார் குழாத்தின் அல்லல் தீர்த்து ஆண்டுகொள்ள திருப்பெருந்துறைப் புகுந்து கோலம் காட்டி நிற்கின்றான். அவனுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடுகின்றார் மணிவாசகர்.

சீதம்கொள் வயல் திருப்பெருந்துறை மன்னா!
சிந்தனைக்கும் அரியாய்! எங்கள் முன்வந்து,
ஏதங்கள் அறுத்து, எம்மை ஆண்டு, அருள்புரியும்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே!

உலகத்திலே விலங்குகள் முதலாயின எவ்வளவோ வாழ்கின்றன. மனிதர்களும் வாழ்கின்றனர். அறிவற்ற உயிரினங்கள் பிறவி முதல் பழகி வருவனவற்றை மாற்றம் இன்றி செய்து வாழ்ந்து மடிகின்றன. அறிவுள்ள மனிதன்அவ்வாறின்றித் தன்நிலையில் உயர பாடுபடுகின்றான். விலங்கு பச்சையாய்த் தின்னும், சமைத்து உண்டு வேறுபடுகின்றான். கல்வி கற்றுத்தேர்ந்து, கேட்டுத்தெளிந்து, பொருட்செல்வம் தேடிச்சேர்த்து, அரியன செய்து, அரியன பெற்று உயர்ந்து விளங்க மனிதன் விரும்புகின்றான். உலகத்தில் மனிதன் வாழ்ந்து பெறத்தக்க பொருட்களில் எல்லாம் அரியது எது? பெரியது எது? உயர்ந்தது எது? என்று நின்று சிந்திக்க வேண்டும். பூதங்கள் தோறும் நிற்கும் பெருமான் எவனோ? அவனே அரியவன், பெரியவன். மற்ற பொருட்களைக் காட்டிலும் அரிய, பெரிய பரம்பொருளைப் பெறுதலே மிக்க பெருமைதரும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அரிய பொருளை எளிதில் பற்ற எழுந்து வருமாறு உற்சாகம் ஊட்டுகின்றது இத்திருப்பாடல்.

ஆறாம் பாடல்

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தார்அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானிடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மணவாளா!
செப்புறு கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
இப்பிறப் பறுத்தெமை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

வகுத்தான் வகுத்த வழியே வினைப்பயனால் உயிர்கள் உலகில் உடம்போடு தோற்றுகின்றன. உடம்பால் தொட்டும், நாக்கால் சுவைத்தும், கண்ணால் கண்டும் மூக்கால் மோந்தும் காதால் கேட்டும் உடம்பொடு பிறந்து உலகில் வாழும் ஆன்மாக்கள் இன்பம் பெறவே விழைந்து நிற்கின்றன. பகுத்தறிவு பெற்ற மனிதனும் இவ்வாறே பிறந்த நாள் தொட்டு வாழ்ந்து சாகும் நாள் வரை உலகத்தில் இன்பம் பெறும் வேட்கை குறையாமல் காணப்படுகின்றான். இன்பம் பெற்ற நிறைவு ஒருபோதும் உண்டாவதில்லை. நெடிது நாள் உண்ட எச்சில் என்று எந்த விருப்பமாவது குறைகின்றதா? இறந்த காலத்து ஏமாற்றங்களும் எதிர்காலத்துப் பேராசைகளும் நம்மை நிகழ்காலத்து வாழவொட்டாமல் செய்து விடுகின்றனவே. உடம்பின் வலிமை கெடக் கெட ரத்தவோட்டம் குறையக் குறைய ஆசை அதிகமாகிறதே அல்லாமல் குறையக் காணோமே! ஆசை பலவாகப் பரந்து இளைத்து உலகத்தை ஒட்டிக் கட்டிப் பிடித்து வாழ்வார்க்குப் பேரின்பம்பெறும் தகுதி ஒருபோதும் உண்டாகாது. யாதனின் யாதனின் நீங்கி அதனின் அதனின் நோதல் இல்லை என்று பற்றெல்லாம் விட்டவர்க்கு இன்பமே எந்நாளும், துன்பமில்லை அவர்கள் ஈர நெஞ்சுடை வீரர்;

வீடும் வேண்டா விறலினர்; ஜீவன்முக்தர்கள். உலகத்தில் ஒருதாமாகிய ஒப்பற்ற பெறலரும் சிறப்புப் பெற்ற பெரியோர்கள். மணிவாசகப் பெருமான் இத்தகைய பெரியோர்களைச் சிவபெருமான் சந்நிதியில் காண்கிறார். இனத்தை இனம் இனம் கண்டு கொள்வதில் வியப்பில்லை. அடியார் தொழ, அடியார்க்கு அடியவனாகிய ஆண்டவன் நிலையை மணிவாசகர் பாடுகின்றார்.

பரபரப்பு அற்று; உலகியல் பற்று வீக்கமற்று; துன்பமெல்லாம் தொலைத்து, கட்டுக்கள் எல்லாம் அறுத்து, காதலினால் உள்ளுருகி இம்மையிலேயே பேரின்பம் துய்த்து நிற்கும் மெய்யடியார்கள் பலர் இறைவன் சந்நிதியிலே. எல்லாம் செய்து முடித்தாயிற்று; எல்லாம் பெற்றாயிற்று என்று இவ்வடியார்கள் தருக்கி நிற்கின்றனரா? இல்லையில்லை எல்லாம் அவனே என்று அடங்கி நிற்கின்றனர். அவனே தலைவன் என்று அவன் திறம் உணர்ந்து அருள் கனியை எதிர்நோக்குகின்றனர். உமாதேவியின் கணவனல்லனோ அவன் தன்மேனியின் இடப்பாகத்தே பெண்ணுரு தாங்கும் பெருமானாயிற்றே! அழகு தழைந்த கல்யாண சௌந்தரிக்கு கணவனாகிய அந்த நித்தமணாளனை உள்ளத்து வைத்து அடியார்கள் தாமும் மையிட்ட கண்களைக் கொண்ட பெண்களாகத் தம்மைக் கருதி நின்று, சிவபெருமானை வணங்குகின்றனர். தென்பால் உகந்தாடும் பெருமான் பெண்பால் உகந்தான் எனக் கண்டுகொண்டு பெண்களாகி, முக்கண்ணானை வணங்கி நிற்கும் அடியார் திறத்தினை மாணிக்கவாசகர் பாடுகின்றார்.

பப்பற வீட்டு இருந்து உணரும் நின் அடியார்
பந்தனை வந்து அறுத்தார், அவர் பலரும்
மைப்புஉறு கண்ணியர், மானுடத்து இயல்பின்
வணங்குகின்றார், அணங்கின் மணவாளா!

செக்கச் சிவந்த செப்புப்போன்ற பூக்களுள் சிறந்தது என்று பெயர் பெற்ற தாமரைகள் மலர்ந்துள்ள குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் வேறு யாவன்? உமாதேவியின் கணவன். நீங்காமல் மெய்யடியார்கள் உருகித் துதிக்க அவர்களுக்குப் பேரின்பம் வழங்குபவன் அவனைக் கண்டு கொண்ட மணிவாசகர் அவனை விடாமல் பற்றி, வேண்டுகின்றார். இறைவனே! உன்னருளால் அடியார் திறமுணர்ந்து, அவரோடும் கூடி, உன்னை வந்தடைந்தேன். உன் ஊர் வயலிலே மலர்ந்த தாமரை உன்னடி போலச் சிவந்தது எவ்வாறு? செப்புப் போல இனிய தேன் தாங்குவது எவ்வாறு? பலரும் புகழ்ந்துபேசப் பெருமை பெறுவது எவ்வாறு? அத்தாமரைப்போலவே நானும் உன் திருவடியாகி, உன் இன்பத்தேன் தாங்கிப்பெருமை பெற வேண்டுமே. ஆண்டவனே! இப்பிறப்பு எடுத்துவிட்டேன். முன்னே! முன்னே! எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் இனி பிறவா வகை செய்து எனை ஆண்டருள வேண்டும். கணவன் அறியாது உறங்கிப்போனால் மனைவிக்குக் கதியேது. இறைவனே நீ எழுந்து ஆண்டருள் என்று மணிவாசகர் சிவபெருமானைத் துயிலுணர்த்துகின்றார்.

செப்பு உறு கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
இப்பிறப்பு அறுத்து, எமை ஆண்டு, அருள்புரியும்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே!

“மெய்யடியார் பலரும் பெற்றது இது என்றும், தாம் பெறுவது இது என்றும்” என்று சுட்டிய மணிவாசகர் நம்மையும் அது பெற வழிகாட்டுகின்றார். நம்முன் உமையொரு பாகத்தானை எழுப்பி நிறுத்துகின்றது இத்திருப்பாடல்.

ஏழாம் பாடல்

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தரச கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

அன்று தொட்டு இன்று வரையில் இயற்கையில் கிடைப்பனவற்றுள் பழத்திற்கு ஒப்பான சுவையுடையது மற்றொன்றில்லை. உடம்புக்கு உறுதியும் நலனும் தந்து நாவிற்கும் சுவைப்பதாகி, என்றென்றும் உயர்வு பெறுவது பழம் ஒன்றே. ஆண்டவனிடம் பெறும் இன்ப அனுபவத்தை பழச்சுவையென்று சப்புக் கொட்டிச் சொல்லிப் பார்க்கின்றார் மாணிக்கவாசகர். எங்கோ இருக்கும் பரம்பொருள் அது கைக்கு எட்டி பறிக்கப்பட்டு, சுவை தந்து நிற்கும் பழமாகி விட்டது, அவர் பாட்டு.

பாற்கடல் கடைந்து விண்ணவர் பெற்றது அமுதம். சுவையுடையது. சாவாமைக்குக் காரணமாகும் மருந்து. மெய்யடியார்கள் சிவபக்திக்கோல் நட்டு; சிவஞான கயிற்றால் சிவத் தொண்டாற்றும் திறம் கொண்டு கடைந்து பெற்ற ஆன்ம காப்பாகிய நல்லமுதம் சிவபெருமான். பரம்பொருள் அடியார்கள் கையில் அமுதமாக அகப்பட்டு விட்டது. செருக்குக் கொண்ட விண்ணவர்க்கு அறிதற்கரிய பெருமான்; அகப்பற்றும் புறப்பற்றும் களைந்த அடியார்க்கு எளிய பெருமான். தேன் சொட்ட எழுகின்றது திருவாசகம்.

அது, பழச்சுவை என அமுது என அறிதற்கு
அரிது என, எளிது என அமரரும் அறியார்

எங்கோ அது அது என்று எட்டத்திலேயிருந்த பரம்பொருள் அடியார் பக்கலிலே இது இது என்று எக்களிக்குமாறு வந்து விட்டது. வந்து அருகு சார்ந்த பரம்பொருள் தன்னுரு இதுவென காட்டி நிற்கின்றது. நீதான் இறைவனா? இதுதான் உன் உருவா? என்று அவன் திருவுருவை அடியார்கள் அவனருளே கண்ணாக அவன் காட்டக் காண்கின்றனர். வந்த பொருளோ உள்ளங் கவர் கள்வன். அவன் என்று சொல்லுமாறு தான் வந்தான். வந்து உள்ளம் நிறைந்த பின்னே அவனை உள்ளேயே காணத் தொடங்கிய பின்னே தன் நெஞ்சைத் தொட்டு இவன் இறைவன் என்பதல்லாமல் வேறென்ன சொல்வது? மெய்யடியார்களை இந்த வகையில் தான் எட்ட நின்று அருளாமல் அருகிருந்தும் அருளாமல் உயிருக்கு உயிராய்த் தான் நிற்கும் நிலையுணர்த்தி ஆண்டு கொள்கிறான் சிவபெருமான். திருஉத்தரகோசமங்கை என்னும் திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ள பெருமானையும் திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள பெருமானையும் தன்னுள்ளத்துள்ளே புகுந்துள்ள இறைவனையும் ஒப்ப ஒன்றாய்க் கண்டு அவன் பொங்கப் பாய்ச்சிய பெருங்கருணை வெள்ளத்தில் ஆழ்ந்து பாடுகின்றார் மணிவாசகர்.

இது, அவன் திரு உரு, இவன், அவன், எனவே
எங்களை ஆண்டு கொண்டு இங்கு எழுந்தருளும்
மதுவளர் பொழில் திரு உத்தரகோச
மங்கை உள்ளாய், திருப்பெருந்துறை மன்னா!

திருஉத்தரகோசமங்கை, திருபெருந்துறை ஆகிய தலங்களிலும் அங்கங்கேயும் இங்கேயும் எங்கேயும் உறைகின்ற பெருமானே! எங்களையெல்லாம் அடிமைகளாகக் கொண்டு விட்டாயே! தலைவன்

முறையாக அடிமைகளை அலுவல் இன்னது என்று குறித்து வேலை வாங்க வேண்டுமே! அடிமைகள் நாங்கள் அலுவலகத்துக்குத் தயாராக வந்துக் காத்து நிற்கின்றோம். பெருமானே! நீ எங்களுக்கு இடும் பணி யாது? எழுந்திருந்து எங்களை உன் பணி செய்யுமாறு ஆட்கொண்டருள்க என்று மணிவாசகர் திருப்பள்ளியெழுச்சிப் பாடுகின்றார்.

எது எமைப் பணி கொளுமாறு? அதுகேட்போம்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே!

உலகத்திலே வேலை வாங்கிக் கொண்டு பிறகே கூலி கொடுப்பார்கள். வேலைக்கும் அதிகமாகக் கூலி கொடுப்பாரை உலகத்தில் பார்ப்பதே அருமை சிவபெருமானோ பெரும் பித்தன் யாரும் தரவியலாத ஒப்பற்ற திருவருளைப் பேரின்பத்தைப் பரிசாக முன்னே தந்து விடுகின்றான். பழச்சுவை அமுது என்று அவனைக்கண்டு துய்த்த மணிவாசகர் இனித் தமக்குப் பணி யாது? என்று இறைவனை எழுப்பிக் கேட்கின்றார்.

சும்மாயிருக்கும் சுகம் பெற்றவர்க்குப் பணி என்ன, இனி, என்று நினைக்கத் தோன்றும். சித்தத்தில் சிவத்தைத் தேக்கிய அடியார்க்கு எய்தியது ஒரு பணியே அதுவே அடியார் பணி அன்பர் பணி செய்ய மணிவாசகரை ஆளாக்கி விட்டான். ஆதலின் இன்பநிலை பெற்றார். இன்ப நிலை எக்களிப்பின் பெருவிளைச்சல் இத்திருப்பாடல்.

எட்டாம் பாடல்

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்!
மூவரு மறிகிலர் யாவர்மற் றறிவார்?
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே!
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே!

இந்த உலகத்தில் யாராயிருந்தாலும் ஒருவர் பிறந்தது தெரியும். வளர்ந்து, வாழ்ந்தது தெரியும். அவன் ஒரு நாள் போனதும் போவதும் தெரியும். தோற்றம், வாழ்வு, இறுதி என்று ஒவ்வொரு பொருளுக்கும் உண்டு! இந்த முறைமை மாறுவதில்லை. உலகத்தில் ஒவ்வொன்றிற்கும் ஒரு முதலும் இடையும் கடையுமுண்டு. ஆனால் முழுமுதற் பொருளுக்கு தோற்றம், நடு, இறுதி என்பதில்லை. எல்லாவற்றையும் ஆடவிடும் பெருமானுக்குச் சர்வவியாபகனுக்கு, சர்வாந்தர்யாமிக்கு, சர்வசக்தனுக்குக் கால எல்லையில்லை. இடவெல்லை இல்லை. கால எல்லையையும் இடவெல்லையையும் கடந்து நிற்பவன் இறைவன். காலத்தையும் குறித்து, இடத்தையும் குறித்துக் கட்டுப்பட்ட வாழ்க்கை இறைவனுக்கு இல்லை. படைத்துக்காத்து, அழித்துத் தொழிற்படும் தெய்வங்களும் ஒரு நாள் தோன்றி, பல நாள் நின்று, ஒரு நாள் ஒடுங்கிப் போவன. அம்மூவராலும் கூட பரம்பொருளை அறிதலாகாது. மூவர் பெருந் தெய்வங்களாலேயே முழுவதும் அறியவெண்ணா பொருளை வேறு யார் அறிதல் இயலும்? என்று பரம்பொருள் தத்துவத்தை வியந்து பாடுகின்றார் மணிவாசகர்.

முந்திய முதல், நடு, இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர், யாவர் மற்று அறிவார்?

காலஎல்லை கடந்து, என்றோ? என்று நின்ற பொருள். இட எல்லை கடந்து எங்கோ? என்று நின்றபொருள், இப்பொழுதே வந்தேன் இங்கே வந்தேன் என்று மணிவாசகர் முன் கோலங்காட்டி நின்றது. நாவாரத் தன்னைப் பாடுமாறு மணிவாசகர் கண்முன் கண்ணாரக் காட்சி தருகின்றான் சிவபெருமான். திருப்பெருந்துறை கோயிலுக்கு வாவா வென்று தானிருக்கும் இடங்காட்டி, அழைத்தான் பெருமான். உயிருண்ட, உடல் சிலிர்க்க, விழிநீர் பெருக, பெருங்களிப்போடு மணிவாசகர் திருப்பெருந்துறை கோயில் கண்டு உள்புகுந்தார். அங்கே உட்ஜோதியில் கலந்து, உலகத்தை மறந்தார்.

அங்கே மணிவாசகர் இறைவன் காட்டக் கண்டது எதனை? பந்தினைக் கையில் கொண்ட செக்கச்சிவந்த விரலினை உடைய உமாதேவியாரை இடப்பாகத்தே கொண்ட சிவபெருமானைத் தரிசிக்கின்றார். பந்தினைத்தளிர் விரல்களால் தாய் பற்றியிருக்கும் பரிவுதான் எத்தகையது? பந்து கொண்டு, இறைவனோடு விளையாடி, அவள் வென்று விட்டாளோ? சிவம் சக்தியோடு இணைந்து விளையாடுவது தானே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் அத்துணையும். திருவருளால் மென்மையாகக் கைபிடித்து, ஆன்மாவை இறைவனிடம் சேர்க்கும் இயல்பைக் காட்டவோ? அம்பிகை கையில் பந்து பற்றியிருக்கின்றாள். பந்தணை விரலியோடு பரமனைப் பார்த்த மணிவாசகர். பரவசமுற்று அம்மையப்பனாகிய கோலமே அடியாரை ஆண்டவன் ஆட்கொள்ளும் அவசரம் என்று காண்கின்றார். இறைவனே! உமையொரு பாகத்தானாக அடியார்களின் ஆன்மாக்களாகிய ஒவ்வொரு பழங்குடிலிலும் நீ எழுந்தருளியிருக்கிறாயே அடியார்தம் ஆன்மாவை உந்தி,

அவர்தம் பாச ஞானம் பசு ஞானங்களைப் போக்கிப் பதிஞானமாக நிறைந்து நிற்கின்றாயே என்று மணிவாசகர் பரம்பொருளின் பரங்கருணைத் தத்துவத்தைக் கொண்டாடுகின்றார்.

பந்து அணை விரலியும் நீயும் நின் அடியார்
பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே

திருபெருந்துறை கோயிலுள்ளே மணிவாசகர் புகுந்தார். பரம் பொருளாகிய ஆன்ம நாயகனோ அவர் உயிரினுள்ளே அம்மையப்பனாகப் புகுந்து விட்டான். அம்மா பிள்ளை அப்பா பிள்ளை என்று அழுது வந்தவர் அம்மாவையும் அப்பாவையும் தாங்கும் பிள்ளையாகி விட்டார். என்று நீ அன்று நான் என்பதற்கேற்ப பதி போலவே பசுவும் என்றுமுளது உலகில் உடம்புக்குத் தோற்றமும் வாழ்வும் அழிவும் உண்டு. ஆன்மாவிற்கு ஏது? ஆன்மா மிகப் பழம்பொருள் முன்னைப் பரம் பொருளாகிய முழுமுதற்பொருள் தங்கத்தக்க இடம் பழம்பொருளாகிய ஆன்மா தானே! பதி தனக்கு உகந்த இடமாகத் தங்க, பழம் இடம் ஒன்றைத் தேடிக்கண்டு பிடித்துத் தன்னையுணர்ந்து கொள்ளும் தகைமை பெற்ற மணிவாசகரைப் பற்றிக் கொண்டது. ஆண்டவன் உண்மை அடியார்கள் அத்துணை பேரையும் பிடித்துக் கொண்டான் தலைப்பிள்ளைக்குச் செல்வத்தைப் பெற்றோர் தந்து, பிள்ளையின் காப்பிலே தம்மை கட்டுப்படுத்திக் கொள்வது போலே, இறைவன் மெய்யடியாருக்குத் தன் திருவருள் செல்வம் தந்து, தான் கட்டுப்பட்டு நிற்கின்றான்.

உலகியல் பற்றாகிய பிடிப்பும், கவலையும் அச்சமும் நீங்கி, நடுக்கற்று நிற்கின்ற மணிவாசகர் இறைவன் காட்ட, அவன் நெருப்புப் போன்ற சிவந்த மேனி கண்டு குளிர்விட்டுக் குதூகலிக்கின்றார். எவ்வுயிர்க்கும்

செந்தண்மை பூண்டு அந்தணனாகி, மணிவாசகரை ஆண்டு கொண்டான் திருப்பெருந்துறை உறை சிவபெருமான். வினைகளைப் பயனூட்டாது கழித்து உலகியல் பற்றை நீக்கி, துன்பமின்றி இறைவன் செய்து விட்டான். அம்மையப்பனாகிய அவனே உள்ளுள் நிறைந்து இன்பம் பிளிற்றுகின்றான். கிடைத்தற்கரிய அமுதம் கிடைத்து விட்டதே என்று கொண்டாடுகின்றார் மணிவாசகர். ஆண்டவனே! உள்ளே புகுந்து விட்டாயே! எழுந்து என்னையே அணைத்துக் கொள் என்று மணிவாசகர் திருப்பள்ளியெழுச்சி பாடுகின்றார்.

செம் தழல் புரை திருமேனியும் காட்டித்
திருபெருந்துறை உறைகோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந்து ஆண்டாய்
ஆர்அமுதே! பள்ளி எழுந்தருளாயே!

அரிய பெருமானை, எளிமையில் உயிருள் உறைய வைப்பது இத்திருப்பாடல்.

ஒன்பதாம் பாடல்

விண்ணகத் தேவரும் நண்ணவு மாட்டா
விழுப்பொரு ளேஉன தொழும்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

கற்பக மரம், காமதேனு, சிந்தாமணி நினைப்பவை எல்லாம் கிடைக்கும் தேவருலகம். மாறாத இளமை நீங்காதபோகம், சாவாத அமுதம் உண்ட பயன், செல்வம், பதவி, ஆணை இத்துனையும் சேர்ந்தால் பின்னே செருக்கு வர கேட்பானே? எப்போதுமே செருக்குத் தலை தடுமாறச் செய்து விடும். உண்மையை உள்ளவாறு காணவியலாமல் மறைக்கும் விண்ணகத் தேவர்கள் என்றுமுள்ளதோர் உண்மையை முழுமுதற் பொருளை நண்ணவும் மாட்டாமல் திகைக்கின்றனர். மற்ற மற்ற போகப் பொருள்கள் எல்லாம் நிறைந்த வாழ்வினைக் கொண்ட தேவர்கள், விழுப் பொருளாகிய சிவபெருமானை எய்த மாட்டாமல் உழல்கின்றனர். சிறந்த பொருளாகிய பெருமான் என்றென்றும் பக்தியால் அவனுக்கு அடிமைக் கொண்ட நல்லடியார்களுக்காக மண்ணுலகத்தில் திருபெருந்துறையில் எழுந்தருளியுள்ளான். மண்ணக வாழ்க்கையை அடியார்களுக்கு விண்ணக வாழ்க்கையின் மேம்பட்டதாகச் சிவபெருமான் செய்து விட்டான். பெருமான் மணிவாசகரை ஆட்கொண்டது திருப்பெருந்துறையிலே. அத்தலம் வளம் மிக்கதாகி விட்டது. தேவர்க்கும் அரிய பொருள் இறங்கி வந்து, அடியார்க்குத் தண்ணருள் வழங்கும் திறத்தை மணிவாசகர் பாடுகின்றார்.

விண்ணகத்தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொருளே உன தொழும்பு அடியோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே
வண் திருப்பெருந்துறையாய்.

வழிவழியாக அடிமையென்றே ஆகிவிட்ட அடியார்க்குக் கிடைத்த பேற்றினுக்கு ஈடுண்டோ? அரிய பரம்பொருள் ஒரு கோலம் கொண்டு, அடியார் முன் நின்று என்னைக்காண், என்னைக்காண் என்று திருவருளால் தூண்டுகின்றது. கண்ணால் காண முடியாத பொருள் அடியார் கண்ணிற்குக் காணுமாறு தன்னைக் காட்டி நிற்கின்றது. அப்பொருள் தன்னைக் காண அடியார்க்குக் கண்ணும் ஒளியும் தந்து உதவுகின்றது அப்போது எல்லாம் அவனாகக் காணும் வேறுபாடற்ற ஞானக்காட்சி பலித்து விடுகின்றது. வேற்றுமையற்ற பார்வை வந்தவுடனே, வாழ்வில் இன்பதுன்ப வேறுபாடில்லாமல் பேரின்பம் தோன்றுகின்றது.

சிற்றின்பத்திலேயே கிறுக்கேறிப் போகிறான் மனிதன் பேரின்பம் துய்த்த மணிவாசகரும் அடியார்களும் களித்தனர்; தேனித்தனர். ஆண்டவனைக் களிதரு தேனாக மணிவாசகர் காண்கின்றார். மருந்துப் பொருளாகிய தேன் இனிய உணவாவதோடு உடலைச் சமநிலைப்படுத்துவது. அதுபோல, பிறவிப் பிணிக்கு மருந்தாகி ஆன்மாவைச் சாந்தி நிலைக்கு உயர்த்துகின்றது இறையனுபவம். இவ்வுலகத்தில் கடலிடத்தே கிடைக்கும் அமுது, உணவிற்குச் சுவை தரும் உப்பு. இது எளிய பொருள். உணவிலே இது அமுது. பாற்கடல் அமுது தேவர்களைச் சாவாமல் வாழ வைத்த அரிய பொருள். சிவபெருமான் தானே தன் அருட்கடலில் பொங்கிஎழுந்து, அழியாது ஆன்மாவைக் காக்கும் அமுதாகி நிற்கின்றான். இந்த அமுதம் அரிதினும் அரிது. சிவபெருமானைக் கடலமுதே என்று மணிவாசகர் கூவிக்

களிக்கின்றார். சுவைமிக்க சாறு கொண்ட கரும்பு கணுக்களுடையது. அதனைக் கண்ணுடையது என்பார்கள். அருளாகிச் செழித்து பேரின்பச்சாறு நல்கும் முக்கண் கரும்பு என்று பெருமானை மணிவாசகர் அழைக்கின்றார். அடியார் கண்ணில் வந்து நிறைந்த பெருமான், என்னிலும் நிரம்பிவிட்டான். உலகத்தில் வேறு பொருள் கண்ணில் படவில்லை. அடியார் உள்ளத்தில் வேறு பொருள் பற்றிச் சிந்தனையில்லை. அடியார்க்கு அவனையே காண வேண்டும் என்ற விருப்பம், மிக மிக அவனுக்கும் அடியார் அகத்துள்ளே புக வேண்டும் என்ற இச்சைப்பெருக, அவன் அடியார் எண்ணத்துள்ளே ஊடுருவி விடுகின்றான். நினைவெல்லாம் அவன் நினைவாகப் பேச்செல்லாம் அவன் பேச்சாக, செயல் எல்லாம் அவன் செயலாக தம் நிலை கெட்டுத் தலைவனாகிய பெருமான் தாட்கு ஆட்பட்டு அடியார் நிற்கும் பேரின்ப நிலையை மணிவாசகர் சுட்டுகின்றார். நிற்பன நடப்பன அறிவற்றன, அறிவுடையன யாவற்றிலும் யாவரினும் உள்ளும் உயிர்ச்சக்தியாக விளங்குகிறான் பெருமான். அவனை உலகுக்கு உயிரானாய் என்று கூறி உவக்கின்றார் மாணிக்கவாசகர். உயிருக்குயிராகிய பெருமான் உறங்குகின்றானா? எங்கும் எப்பொழுதும் அடியார் கண்ணினும் கருத்தினும் நிறைந்த பெருமானுக்கு உறக்கமா? அவனை எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே என்று மாணிக்கவாசகர் பாடுகின்றாரே என்ன வியப்பு? உறங்கும் ஒருவனை எழுப்ப, அவனை நேரில் எழுப்ப முடியாவிட்டால் வேறு ஓசை செய்து எழுப்பும் வழக்கமுண்டு. உறங்குபவனுக்குப் பக்கத்தில் உறங்காதிருப்பவனை உரக்கக் கூப்பிட்டு உறங்குகின்றவனை எழுப்பி விடலாம். அதுபோல, உலகியல் பற்றுக்குட்பட்டு, உறங்குபவர்களை நேரில் எழுப்பாது உறங்காதவனைப் பெருமானைக் கூவியழைத்து, பேரோசை செய்து எழுப்பப் பார்க்கிறார் மாணிக்கவாசகர்.

......வழி அடியோம்.
கண் அகத்தே நின்று, களிதரு தேனே!
கடல் அமுதே! கரும்பே! விரும்படியார்
எண் அகத்தாய்! உலகுக்கு உயிர் ஆனாய்!
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே!

மணிவாசகர் தம் அருள் உள்ளத்தால் தாம் பெற்றதை மக்கள் அனைவரும் பெறவேண்டும் என்று விழைகின்றார். கண்ணிலும் எண்ணிலும் கடவுளை நிறைக்கின்றது இத்திருப்பாடல்.

பத்தாம் பாடல்

புவனியில் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் னலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெம்மை ஆட்கொள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே!

படைப்பாகிய செய்த தொழிலையே மறுபடியும் மறுபடியும் செய்து செய்து பிரமனுக்கு அலுத்துவிட்டது. காத்தல் தொழிலையே மீள மீளச் செய்தவாறிருந்த திருமாலுக்கும் சலித்துவிட்டது. உலகத்திலே உற்சாகத்தோடு உழைத்து வேலை பார்க்கின்றவர்கள் ஊதிய உயர்வு, பதவி உயர்வு என்று எதிர்பார்க்கின்றனர். பெருந் தெய்வங்களான பிரமனும் திருமாலும் தம் தம் நிலைமைக்கு மேல் என்ன உயர்வை எதிர்பார்க்க முடியும்? விண்ணிலே தேவர்களும் அவரவர் நிலையிலே நிற்கின்றார்களே ஒழிய அவர்களுக்கும் மேல்நிலை ஒன்று எட்டவில்லை வானகத்தில் வாழ்வார்க்கெல்லாம் ஏதோ ஒரு வகையான குறை; உள்ளக் குமைச்சல். இத்துணை நெடுங்காலம் பெரும்பதவி, போகம் ஆணை வகித்துப் பயன் என்ன? எல்லாம் வீணாகி விட்டதே என்று ஏங்குகின்றனர். ஏன்? விண்ணகத் தெய்வங்கள் எல்லாம் மண்ணைப் பார்க்கின்றன. மண்ணுக்குத்தான் எவ்வளவு மகத்துவம். மனித்த பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே என்ற ஓசை தேவர்கள் காதுகளுக்கு எட்டுகிறது. ஆன்ம தரிசனம் செய்து முழுமுதற் பொருளோடு நேர்நின்று உரையாடும் மண்ணுலகத்துப் பக்தர்களின், ஞானிகளின், அடியார்களின் குரல் தேவர்களுக்குக் கேட்கின்றது.

மண்ணுலகத்தில் அருளாளர்கள் தேவரினும் மேம்பட்ட பதவியாகிய பரமுத்திப் பெறுகின்றனர். இதனைக் காணும் தேவர்கள் பூமியில் போய் தாம் பிறக்காமல் விண்ணிலே பதவி பெற்று நாளையெல்லாம் வீணாகப் போக்கினோமே? என்று ஏங்குகின்றனர். மண்ணுலகந்தான் சிவபெருமான் இறங்கி வந்து ஆன்மாக்களைத் திருவருள் பாலித்து, ஆட்கொள்ளுதற்குரிய இடம் என்று விண்ணிலேயிருந்து மண்ணை நோக்கிப் பெருமூச்சு விடுகின்றனர் தேவர்கள். மண்ணிலே தன் கண்அருள் பரவ அவ்வாறு சிவபெருமான் என்ன செய்து காட்டினான். ஆற்று வெள்ளம் கரை புரண்டு ஓடினாலும் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆற்றிலே இறங்க நல்ல துறை வேண்டுமே. சிவபெருமானின் கருணையுள்ளம் கரைபுரண்டு ஓடுகின்றது. அவ்வெள்ளத்தை உரியவாறு முகந்து கொள்ள விண்ணிலே தகுந்த துறையொன்று இல்லை. மண்ணிலேதான் திருப்பெருந்துறை உளது. திருவருள் பெறத்தக்க பெருமை மிக்க துறை அது. அந்தத் துறைக்கு மணிவாசகரைச் சிவபெருமான் அழைத்து அருள் வெள்ளத்திலே அவரை மூழ்கச் செய்தான். இக் காட்சியைக் கண்ட தேவர்கள் விண்ணகத்தை விட்டு மண்ணகத்திற்கு வர விரும்புகின்றனர். ஏங்குகின்றனர். தேவர்களின் இந்தத் தணியாத ஆசைப்பாட்டை மணிவாசகர் பாடுகின்றார்.

புவனியில் போய்ப் பிற வாமையில் நாள்நாம்
போக்குகின்றோம் அவமே, இந்தப்பூமி
சிவன் உய்யக் கொள்கின்றஆறு, என்று நோக்கித்
திருப்பெருந்துறை உறைவாய்! திருமால் ஆம்
அவன் விருப்பு எய்தவும், மலரவன் ஆசைப்படவும்.

ஆற்றல் மிக்கவனுக்குத்தான் பேரருள் புரியவும் சக்தி உண்டாகும். ஆற்றலற்றவன் கருணை அழுகையாக முடியுமே தவிர பயன்படாது. விண்ணுக்கும் தேவர்க்கும்

ஒளித்தபிரான் மண்ணுக்கு இறங்கி வருகின்றான். விண்ணிலே பதவி தந்து தேவர்களை வேலை வாங்குகிறான். மண்ணிலே அடியார்க்கே என அவனே இறங்கி வந்து, வேலை செய்கிறான். அடியார் பக்திக்கு மெச்சி, ஞானத்திற்கு உகந்து, தொண்டிற்குப் பரிசாக ஆண்டவன் தன்னையே கொடுத்து விடுகிறான். சிவபெருமான் வேறு, அவன் திருவருள் வேறு என்பதில்லை. மண்ணுலகமாகிய வயலிலே ஆண்டவன் திருவருளாகிய பயிர் செழித்து முக்தியாகிய போகம் பலிக்கின்றது. அடியார்கள் எல்லோரும் தம் கைக்கு அகப்பட்ட பெறுதற்கருமையான சிவபெருமானாகிய அமுதத்தை வைத்து, சுவைத்து உண்கின்றனர். பாற்கடலிடத்துப் பெற்ற அமுதத்தையுண்ட தேவர்கள் மண்ணினை நோக்கி, இக்காட்சியினைக் காண்கின்றனர். மண்ணவரும் உண்ணும் அமுதம் தமக்கில்லையே என்று பொருமுகின்றனர். மணிவாசகர் எல்லாம் வல்ல பெருமானே! உனக்குத்தான் எத்தகைய கருணை? விண்ணும் வாட மண்ணில் அடியார்க்கு அமுதானாய், உன்னை நினைந்து பாடி, ஆட எங்களை ஆட்கொள்வாயாக! அடியார்கள் உன்னை முகந்து கொள்ளுமாறு அவர் உள்ளங்களிலே நீ எழுந்து நின்று பணி கொள்க என்று பள்ளியெழுச்சிப்பாடுகின்றார்.

...... நின் அலர்ந்த மெய்க் கருணையும், நீயும்
அவனியில் புகுந்து, எமை ஆட் கொள்ள வல்லாய்?
ஆர் அமுதே! பள்ளி எழுந்தருளாயே!

கிடைத்தற்கரிய மனிதப் பிறவி மண்ணுலகத்திலே கிடைத்து விட்டது. சிவபெருமானின் திருவருள் வெள்ளமாகப் பாயும் பூமியிது. வெள்ளத்திலே ஆழ்ந்து பேரின்பம் பெறத் தக்க துறையினைக் கண்டு கொள்ளும் நேரமிது. தக்கத் துறையில் படிந்துப்பேரின்பம் பெறுக! என்று எழுப்புகின்றது இத்திருப்பாடல்.



திருவெம்பாவை
பதின்மூன்றாம் பாடல்
"பைங்குவளைக் கார்மலரால்"

28.12.83
பேராசிரியர். கா. சிவராஜேந்திரன்.

இருள் மங்கை தன் கொட்டுப் போர்வையை எடுத்துவிட என்றும் இளங்காலை நேரம். உள்ளத்தில் பக்திவெள்ளம் பொங்க, மகேசன் அடிபாடி, மார்கழி நீராட வந்த பெண்கள் பொய்கையைப் பார்க்கின்றனர்.

பொய்யாத வளமையால் பொங்கித் ததும்பும் மடு அது.

கண்ணுக்கு இனிய காட்சிகள். காதுக்கு இனிய ஓசைகள். சிந்தையைப் பறிகொடுத்து நிற்கின்றனர். பசிய கருங்குவளை மலர்கள். செக்கச் சிவந்த தாமரைப்பூக்கள். கூடு விட்டுப் பறப்பட்ட பறவைகளின் கொஞ்சல் ஒலி. மாரி காதலியைத் தேடிச் செல்லும் காற்றுக் காதலனின் தெம்புக் கலகலப்பு. பொய்கையின் மேல் சிலிர்க்கும் அலைகள். அவற்றின் ஓசை. உடல் அழுக்கைப் போக்க நீராடுவதற்கு வருவோரின் கூட்டம். இவற்றைக் காணும், கேட்கும் கன்னியர் உள்ளம் துள்ளுகிறது.

"பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்"

பொய்கைக் காட்சியைத் தான் இவ்வாறு பாடத் தொடங்குகின்றனர். ஆனால் உள்ளத்துப் பக்தி உலகத்து அழகுணர்ச்சியை வென்று விட்டது. பொய்கையில் பரமனையே பார்த்து விடுகின்றனர். அம்மையப்பனையே அந்த மடுவை நோக்கிப் பாடிப் பரவசமடைகின்றனர்.

கருங்குவளை மலர் பெருமானின் நீலகண்டத்தையும், அம்மையின் கருங்கண் பார்வையையும், அவள் அற்புதத் திருமேனி வண்ணத்தையும் காட்டுகிறது. பெருமானின் திருக்கைகளையும், பிராட்டியின் திருக்கைகளையும், இறைவன் மேனி நிறத்தையும் தாமரைப் போது புலப்படுத்துகின்றது.

வெண்மையான நீர்ப் பறவைகள் — அன்னை அணிந்துள்ள சங்கு வளையல்களையும் அப்பன் அழகுள்ள வெண்ணீற்றையும் நினைவுபடுத்துகின்றன. அங்கம் குருகினத்தால் என்றும் அங்கம் குருகினத்தால் என்றும் பொருள் தரப் பிரிந்தும், பிரியாமல் நிற்கும் இத்தொடர் சிவசக்தியின் தொன்மைச் சம்பந்தத்தையே காட்டுகிறது. அது மட்டுமோ! அங்கம் குருகினத்தால் என்றதால் உருகும் அடியார் திருக்கூட்டத்தையும் உள்ளடக்கி விடுகிறது. பெண்கள் வாக்கிலே அம்மையப்பன் அடியாரோடு உலா

பின்னும் அரவத்தால் என்று இணைத்துப் பாடுகின்றனர். பின்னிக் கிடக்கும் பாம்புகளை அணிந்த பெருமானையும், பாம்பு போலப் பின்னிய கூந்தலுடைய பிராட்டியையும் நினைத்து விடுகின்றனர்.

பொய்கையிடத்தே உடல் அழுக்கைப் போக்க வருவோர் கூட்டம். அம்மையப்பனிடத்தே ஆன்ம அழுக்கை — பற்று நீக்க வருவோர் கூட்டம். பொய்கையிலே பிராட்டியையும் பெருமானையும் கண்டாயிற்று.

இறைவனைக் கூடும் இனிய உணர்வுடன் பொய்கையில் புகுந்து புனித நீராடுகின்றனர். சிலம்புகள் ஒலிக்க நடந்து, பொய்கையில் பாய்ந்து, வளையல்கள் ஒலிக்க, மார்பகம் விம்ம, உணர்வு பெருகக் குடைந்து நீராடுகின்றனர்.

அம்மையப்பனின் வியாபகத் தன்மையால் வியாப்பியமாக அடங்கி நிற்கின்றனர்.

நான்மைக் கோலமாகிய அம்மையப்பக் கோலம் கொண்டது அந்தப் பொய்கை. ஆன்மப் பெண்களுக்கு நயன தீட்சையும், மானசீக தீட்சையும், ஸ்பரிச தீட்சையும், வாசிக தீட்சையும் தந்து பொய்கையாக அம்மையப்பனே வந்து அருளினன்.

"எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோரெம்பாவாய்!"

அம்மையோடு அப்பனைப் பொய்கையில் கண்ட பெண்கள் — என்ன வேதாந்தம் இது? எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவன்றோ! தாய் காட்டத் தந்தையை அறியுமாறு - பிராட்டியைப் பார் - பெருமானைக் காட்டி இன்னும் அவன் தாட்கே ஆட்படுத்துவாள்.

பிரிந்த ஆன்ம மக்களைச் சிவத் தாயோடும் சிவத் தகப்பனோடும் சேர்த்து வைக்க அறிவுறுத்துகிறது இத்திருப்பாடல்.